# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 ஆடவை நல்லோரை ஆனித் திங்கள் 26ம் நாள் (10-07-2025 வியாழக்கிழமை) நிறைமதி வெளியீடு +94 21 222 9722



அருள்மிகு நயினையம்பதி நாகபூசணித் தேர்த்திருவிழா (ஆனி 25)

# அருள்மிகு நயினையம்பதி நாகபூசணித் தேர்த்திருவிழா (ஆனி 25)

















# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன் - தலைமை ஆசிரியர்,**
BSc Eng (Hons) CPEng (Aust) FIEAust MA (Philosophy)
+6149949 3300, thennavan@thennadu.org




# அணிச்சல் வெட்டி மெழுகுதிரி அணைப்பது மருளையே சேர்க்கும்

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு - (குறள் - 423)**

பண்பாடு என்றால் என்ன, பண்பாட்டு விழுமியங்கள் என்றால் என்ன என்பது பற்றி நாங்கள் எப்போதாவது ஆழமாகச் சிந்தித்திருக்கிறோமா என்று எண்ணுமளவிற்கு தமிழர் பண்பாடு இலங்கையிலும், புலம்பெயர் நாடுகளிலும் மாறிக்கொண்டு வருகிறது. பண்பாடு என்பது மொழியுடன் மட்டும் நின்றுவிடாது, தத்துவம், உணவு, இறை நம்பிக்கை, சடங்குகள், அரசியல், இறையாண்மை, நிலம், வழிபாட்டு முறைமைகள், சமூக மேம்பாடு என்று பல கூறுகளைக் கொண்டது. நாங்கள் இதில் எதாவது ஒன்றுடன் குறிப்பாக மொழி மற்றும் அரசியலுடன் நின்றுகொண்டு மற்றவற்றை தொலைத்து விட்டோமா என்ற எண்ணம் என்மனதில் பல்லாண்டு காலமாக எழவே செய்கின்றது.

இந்தவகையில் இம்முறை பிறந்தநாள் விழாவினை எடுத்துக்கொள்வோம். இலங்கையில் மட்டுமல்ல உலகெங்கும் வீரவசனங்கள், தேசியம் மற்றும் பண்பாடு பற்றிப் பெரிதாகப் பேசும் தமிழர்கள் கூட வாழ்வியல் சடங்குகளில் அணிச்சல் (Cake) வெட்டுவது, மற்றும் மெழுகுதிரி அணைப்பது போன்ற தொடர்பில்லாத, காரணங்கள் அற்ற வேற்றுப் பண்பாட்டினை ஆழமாக உள்வாங்கி கொண்டுள்ளனர். சாவு வீட்டினைத் தவிர அனைத்து தமிழ் நிகழ்வுகளிலும் இன்று அணிச்சல் (Cake) வெட்டப்படுகிறது.

விளக்கினை ஏற்றி, ஒளியினைப் பெருக்கி, இறை நிலையை உணரக்கூடிய ஒரு பொழுதினில் தான் நேர்மறை எண்ணங்கள் பெருக்கெடுக்கும். மனம் நல்லதைச் சிந்திக்கும். இருள்நீங்கி அருள்பெருகும். வாழ்வு மேலோங்கும். மெழுகுதிரி அணைப்பது மாறாக இருளைக் கூட்டி மருளைப் பெருக்கும் ஒரு விடயமாகும் என்பதை நாங்கள் சிந்திக்கவேண்டும்.

**விளக்கினை ஏற்றி வெளியை அறிமின்**
**விளக்கின் முன்னே வேதனை மாறும்**
**விளக்கை விளக்கும் விளக்கு உடையார்கள்**
**விளக்கில் விளங்கும் விளக்கு அவர் தாமே**
**- திருமந்திரம்**

அத்துடன் தமிழர்கள் இயன்றளவு, பிள்ளைகளின் மற்றும் பெரியவர்களின் முக்கிய பிறந்த நாளினையாவது நட்சத்திர அடிப்படையில் கொண்டாடவேண்டும். இதன் பின்னால் மயங்கா மரபுத் தமிழர்களின் ஆழ் அறிவியல் புதைந்து கிடக்கிறது. உங்கள் முன்னோர்களின் திதிகளை (இறந்த நாளினை) நிலவின் அடிப்படையில் தானே செய்கிறீர்கள். இது எங்களின் பண்பாட்டினைப் பறைசாற்றி நிற்கிறது. மேலும் உங்கள் பிறந்த நட்சத்திரத்தின் அடிப்படையிலே உங்கள் குறிப்பு எழுதப்பட்டு சோதிடம் பார்க்கப்படுகிறது. அதுபோல் உங்கள் பிறந்த நாளும் நட்சத்திரத்தின் அடிப்படையிலே கொண்டாடுவது தான் சாலவும் சிறந்தது.

**நின்று நிலைஇயர் நின்நாண்மீன், நில்லாது**
**படாஅச் செலீயர் பகைவர் மீனே**
**(புறநானூறு : 24: 24-25)**

தமிழர் பண்பாடு என்பது தற்போது வாழ்வியல் மற்றும் திருக்கோயில் சடங்குகளில் மட்டும் தான் எஞ்சி நிற்கிறது. அதனை மேலும் அழியவிடாது, காப்பாற்றி மேன்மையுறச் செய்ய உலகத்தமிழர் அனைவரும் முன்வரவேண்டும். குறிப்பாக என் சக பெற்றோர்கள் இதனைச் சிந்தித்து செயல்படுவது வரலாற்றுக் கடமையாகும்.



தென்னாடு

செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org



**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org




# தென்னாடு நிறைமதி அறிக்கை

(10-06-2025) - மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 விடை நல்லோரை வைகாசித் திங்கள் 27ம் நாள் நிறைமதி அன்று (10-06-2025 திங்கட்கிழமை) ஐம்பத்து எட்டாவது தென்னாடு திங்கள் செய்தியிதழ் வெளியீடு நிறைமதி வழிபாட்டுடன் சிறப்பாக இடம் பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர். சிவக்கொழுந்து சிறி சற்குணராசா அவர்கள், வலம்புரி பத்திரிகை தலைமை ஆசிரியர் சிவத்திரு. நல்லையா விஜயசுந்தரம் அவர்கள், இந்து சமய கலாசார அமைச்சின் முன்னாள் துணை இயக்குனர் சிவத் திரு. முத்தையா சின்னத்தம்பி சிறி தயாளன் அவர்கள், கோண்டாவில் இந்துக் கல்லூரியின் அதிபர் சிவத்திரு. நடேசு தயாளன் அவர்கள், தற்போது பணி உயர்வு பெற்றுள்ள கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை யின் அதிபர் திருமதி. கவின்யா நவஜீவா அவர்கள் மற்றும் அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்த னர்.

நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர். சிவக் கொழுந்து சிறிசற்குணராசா ஐயா அவர்கள் சிவத் திரு. நல்லையா விஜயசுந்தரம் அவர்களுக்கு முதல் இதழினை வழங்கி, தென்னாட்டின் ஐம்பத்து எட்டாவது திங்கள் இதழை வெளியிட்டு வைத்திருந்தார். தொடர்ந்து ஏனையோர்களுக்கு இதழ் வழங்கி வைக்கப்பட்டிருந் தது.

மேலும் இலங்கை அதிபர் சேவையில் ஒன்பது ஆண்டுகள் பணிசெய்து, தற்போது கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை அதிபராக பணியாற்றி பணி உயர்வு பெற்றுள்ள திருமதி. கவின்யா நவஜீவா அவர்களை கௌரவிக்கு நிகழ்வும் இடம்பெற்றிருந்தது. அவர் களிற்கான வாழ்த்துரையை துணைவேந்தர் பேராசிரி யர். சிவக்கொழுந்து சிறிசற்குணராசா ஐயா அவர்கள் வழங்கி வைத்திருந்தார்.

(12-06-2025) - வைகாசி மூலம் நன்னாளில், தென்னாட்டில் திருஞானசம்பந்தர் சுவாமிகள் குருபூசை வழிபாடுகள் இடம்பெற்றன. (23-06-2025) – ஆனித் திங்கள் தேய்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப் பாக இடம்பெற்றன. (29-06-2025) - ஆனி மகம் நன்னாளில் , தென்னாட்டில் மாணிக்கவாசகர் சுவாமி கள் குருபூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

(01-07-2025) - ஆனி உத்தர நன்னாளில் நடராச பெருமானுக்கும், ஐம்பூதநாத பெருமானுக்கும் எதிர்முன்னிலையாக திருமஞ்சன வழிபாடுகள் சிறப் பாக இடம்பெற்றன. இவ்வழிபாட்டில் அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர். (01-07-2025) - யாழ்ப்பாண பிரபல பௌதீகவியல் ஆசிரியரான சிவத்திரு. இராஜரட்ணம் குகன் அவர்கள், மண்டைதீவில் புதிதாக கட்டிய வீட்டிற்க்கான சாந்திபூசை வழிபாடுகள், தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தினால் செந் தமிழில் ஆற்றி வைக்கப்பட்டன. (02-07-2025) – சிவத் திரு. இராஜரட்ணம் குகன் அவர்களின் புதிய வீட்டிற் கான, சுவாமி நிழற்படங்களிற்கான பூசை வழிபாடுகள் தென்னாடு ஐம்பூதநாதர் திருக்கோயிலில் இடம்பெற் றன. அன்றைய தினம் ஆசிரியர் குகன் அவர்களின் சகோதரர், பௌதீகவியல் ஆசிரியரான சிவத்திரு. இராஜரட்ணம் குமரன் அவர்களிற்கு தென்னாடு இதழ் வழங்கி வைத்தல் நிகழ்வும் இடம்பெற்றிருந்தது.

(03-07-2025) - தென்னாட்டில் ஈழத்து சித்தர் அருளம்பலம் சுவாமிகள் குருபூசை வழிபாடுகள் இடம்பெற்றன. (08-07-2025) – ஆனித் திங்கள் வளர் பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற் றன.

**திருச்சிற்றம்பலம்**

# சந்நிதியான் ஆச்சிரம முதல்வருக்கு
# ஐ. நா மனித உரிமைகள் அமைப்பு விருது வழங்கி கௌரவிப்பு



யாழ்ப்பாணம் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகள் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை அமைப்பினரால் **"தேசாபிமானி"** என்னும் விருதும், மனித உரிமைகளிற்கான மாகாண பணிப்பாளர் என்ற பதவியும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். கொழும்பு அருங்காட்சியகத்தின் கேட்போர் கூடத்தில் வைத்து இவ் விருது வழங்கும் நிகழ்வு, கடந்த 21-06-2025 அன்று காலை 10 மணியளவில் இடம்பெற்றிருந்தது.

தன்னலமின்றி அறப்பணி செய்யும் மோகன் சுவாமிகள் பல்வேறு அமைப்புகளாலும் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். அமுதவாரிதி, அறப்பணி அரசு, சமூகச் சுடர் எனப் பலவிருதுகள் அவரை அலங்கரிக்கின்றன. இந்தியப் பல்கலைக்கழகம் ஒன்று 2017 இல் கௌரவ டாக்டர் பட்டத்தை வழங்கியது. யாழ்ப்பாண மாநகரசபையின் சைவசமய விவகாரக் குழு 2018 இல் யாழ் விருதை வழங்கிக் கௌரவித்தது. மேலும் சந்நிதியான் மண்ணில் மோகன் சுவாமிகளின் அறப்பணிகள் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையே அவருக்குரிய மிகப்பெரிய விருதாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

அடியார்க்கு அமுது செய்விக்கும் மேலான பணியுடன், அளப்பெரும் பணிகள் பல செய்து வரும் தவத்திரு. கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகளை போற்றி வாழ்த்துவதோடு, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்திட எல்லாம் வல்ல ஐம்பூத நாதப் பெருமானிடத்தில் விண்ணப்பம் வைக்கின்றோம்.

**திருச்சிற்றம்பலம்**

---

# தவத்திரு. அருளம்பல சுவாமிகளின்
# 100வது குருபூசை நாள் வழிபாடுகள்

கடையிற் சுவாமிகளை குருவாகக் கொண்டு தோன்றிய, ஈழத்து சித்தர்களில் மூத்த குரு சீட பரம்பரையில் வந்த தவத்திரு. அருளம்பல சுவாமிகளின் நூறாவது குருபூசை நாள் வழிபாடுகள், சைவ மகா சபையின் ஏற்பாட்டில், சுவாமியின் வம்சாவளியினரது அனுசரணையுடன் அருள்பலம் சுவாமிகளின் குருநாதர் கீரிமலை குழந்தைவேல் சுவாமி கோயிலில் உள்ள அருளம்பல சுவாமிகளின் சமாதி பீடத்தில், கடந்த ஆனி அத்தம் நன்னாளில் (03-07-2025) இடம்பெற்றிருந்தது.

நிகழ்வில் சிவகுரு ஆதீனம் தவத்திரு. வேலன் சுவாமிகள், கந்தர்மடம் சிவகுருநாத பீட குருமுதல்வர், யாழ் பல்கலைக்கழக உபவேந்தர், யாழ் பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீட பீடாதிபதி, சைவ மகா சபையினர் ஆகியோருடன், அருளம்பல சுவாமிகளின் வம்சாவழியினர் மற்றும் அறநெறி ஆசிரியர்கள், மாணவர்கள், தாதிய மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

மேலும் அன்றைய நாளில் சுவாமிகள் நினைவாக 100 மரக்கன்றுகளும் நடப்பட்டதுடன், வடக்கையும் கிழக்கையும் சுவாமி விபுலானந்தருக்கு முன்னரே ஆன்மீகத்தாலும் சமூகப் பணிகளாலும் இணைத்தவரான, வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை தொழில் இடமாகவும் கீரிமலையை ஆன்மீக வாழ்விடமாகவும் கொண்ட அருளம்பல




சுவாமிகள் பற்றிய அருமையான நூலையும், அவர் பதிப்பித்த நூல்களின் மீள் பதிப்பையும் அவரது வழிதோன்றல் கலாநிதி செல்வமனோகரன் அவர்களது ஆக்கத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டிருந்தமை போற்றுதலுக்குரியதாகும். அன்றைய நாளில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்திலும் தவத்திரு. அருளம்பல சுவாமிகளின் குருபூசை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

**திருச்சிற்றம்பலம்**

# தமிழ் வழிபாட்டு நெறிமுறைப் பயிற்சி வகுப்பு




கோவை, பேரூர் மணிவாசகர் அருட்பணி மன்ற அறக்கட்டளையும் மற்றும் சென்னை - திருமுடிவாக்கம் ஜெயின் பப்ளிக் பள்ளியும் இணைந்து நடத்தும் தமிழ் வழிபாட்டு நெறிமுறைப் பயிற்சி வகுப்பானது, வருகின்ற 09-08-2025 வெள்ளிக்கிழமை முதல் 11-08-2025 திங்கட்கிழமை வரை நடைபெற உள்ளது. ஆண், பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம்.

இந்த பயிற்சி வகுப்பில், சமயதீக்கை, ஐங்கரன் வேள்வி, வாழ்வியல் சடங்குகள் - திருமணம் முதல் நீத்தார்கடன் போன்ற முக்கிய செயல்முறைகளை செயல்முறை விளக்கங்களுடன் கற்றுக்கொள்ள முடியும். பங்குபற்ற விரும்பும் அடியார்கள் படத்தில் காணும் இணைப்பினூடாக விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்டு, பூர்த்தி செய்து, 31-07-2025 அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:**
**சிவ. பா. கோகுல கிருஷ்ணன்,**
**2/164 சாந்தி பாலன் இல்லம்,**
**பிரிந்துாவன் நகர், போடிபாளையம்,**
**மதுக்கரை அஞ்சல், கோவை - 641105.**

**ஒருங்கிணைப்பாளர்கள்:**
**சிவத்திரு. ந. சங்கரலிங்கம்** - +91 9840968273
**சிவ. பா. கோகுல கிருஷ்ணன்** - +91 9600449593

# திருச்செந்தூரில் அரன்பணி அறக்கட்டளையின் அமுது செய்விக்கும் திருப்பணி



பதினாறு ஆண்டுகளின் பின்னர், முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடாக திகழும் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு பெருவிழாவானது, கடந்த 07-07-2025 அன்று, தமிழ் மறைகள் முழங்கிட மிக சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளது. முருகப் பெருமானின் திருக்குட நன்னீராட்டு பெருவிழாவில் ஆதீன முதல்வர்கள், சைவப் பெருந்தலைவர்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் அடியார் பெருமக்கள் என பெருந்தொகையானோர் கலந்து திருவருள் பெற்றிருந்தனர்.

பத்தர்கள் வெள்ளத்தால் மூழ்கியிருந்த திருச்செந்தூரில், அரன்பணி அறக்கட்டளை அமைப்பினர் அன்னசாலை அமைத்து, மூன்று நாட்கள் தொடர்ந்து அடியார்களிற்கு திருவமுது செய்விக்கும் திருப்பணியை சிறப்புற நடத்தி முடித்துள்ளமை போற்றுதலுக்குரியதாகும். இப்பணியில் அரன் பணி அறக்கட்டளையின் 500 ஏற்கும் மேற்பட்ட அடியார்கள் இணைந்து பணிசெய்து, மூன்று நாட்களாக மூன்று வேளையும் உணவளிக்கும் பணியினை நிகழ்த்தியுள்ளனர்.

பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட அடியார்கள் கலந்து கொண்ட இப்பெருவிழாவில், 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்பதற்கு இணங்க, அடியார்களின் உள்ளம் மகிழும் வண்ணம் அன்னசாலை அமைத்து, அன்பான அரவணைப்புடன் அரன்பணி அமைப்பினர் முன்னெடுத்திருந்தத் இத்திருப்பணி ஓர் எடுத்துக்காட்டாக அமைவதோடு, மெய்யடியார்களின் உள்ளன்பையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

திருச்சிற்றம்பலம்

# தென்னாடு நிறுவுநருக்கு ஐம்பதாவது அகவை பெருமங்கல விழா




தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தினை நிறுவி, எம்மண்ணில் மட்டுமல்லாது புலம்பெயர் நாடுகளிலும், சைவத் தமிழ் பணிகளை பெரும் முனைப்போடு முன்னெடுத்து வரும் சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன் அவர்கள் இவ்வாண்டு ஐம்பதாவது அகவை பெருமங்கல விழா காண்கிறார்.

தெய்வத்தமிழ் வழிபாடு, கல்லூரிகள் பாடசாலைகள் தோறும் சிவவழிபாடு என சைவத்தை அதன் மரபிலேயே அடுத்த தலைமுறைக்கு கையளிக்கும் பெரும் பணியை காலத்தின் தேவையுணர்ந்து முன்னெடுக்கும் தென்னவன், 'தென்னாடு" இதழின் தலைமை ஆசிரியராக இருந்து இவ்விதழையும் இடையறாது வெளிவர நெறிப்படுத்துகின்றார்.

சிவனுக்கு திருக்கோயில் அமைத்தல், ஞானலிங்க பீட அறநெறிப் பாடசாலைகளை அமைத்தல், வறியவர்களுக்கு உதவுதல் போன்ற மகத்தான பணிகளை முன்னெடுக்கும் தென்னாடு சிவமடத்தை இயக்கும், தென்னவன் பார்த்தீபன் அவர்கள், தமிழர் மரபு அடிப்படையில், எதிர்வரும் ஆடித் திருவோணம் அன்று (08-08-2025) ஒசுத்திரேலியா வென்றவேர்த்வில் றெட்கம் மண்டபத்தில் பொன் விழாக் காண்கின்றார். அவர் நெடிது வாழ்ந்து, சைவமும் தமிழும் செழிப்புற சேவையாற்ற வாழ்த்துகின்றோம்!

**திருச்சிற்றம்பலம்**

**சைவ மாணவர் சபை**

**இலங்கை**

# காரைநகர் மணிவாசகர் சபை முன்னெடுத்த மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வு

*கடந்த 30.06.2025 (திங்கட்கிழமை) காரைநகர் இந்துக் கல்லூரியின், மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வு கல்லூரி மாணவர்கள் முன்னிலையில் காரைநகர் மணிவாசகர் சபையினரால் முன்னெடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் சார்பில், தென்னாடு இளம்புலவர் சிவ. செந்தமிழாதன் (ஜீவா.ஷஜீவன்) அவர்கள் சிறப்புரையாற்றினார். நிகழ்வை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பெறுமதியான தங்கப்பதக்கங்கள் வழங்கி வைக்கப்பட்டன. கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தின் பின்னர் இந்த நிகழ்வு மீண்டும் சிறப்புற இவ்வாண்டு இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.*





# தென்னாடு வாசிப்போம் பரிசில்கள் பெறுவோம்

மாணவர்களின் சைவ சமய அறிவினை மேம்படுத்தவும், தமிழர் வழிபாட்டு விழுமியங்களை வெளிக்கொண்டு வரவும், ஒவ்வொரு நிறைமதிக்கும், கொக்குவில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தினால் வெளியிடப்படும் தென்னாடு திங்கள் இதழினை கருத்துடன் வாசிக்கும் பழக்கத்தினை மேம்படுத்தும் நோக்குடன் இந்த பரிசில் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

பாடசாலை மாணவர்கள், பின்வரும் கேள்விகளுக்கு, வைகாசித் திங்கள் 58 ஆவது தென்னாடு திங்கள் இதழில் இருந்து பதில்களை எழுதி, பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன், உங்கள் முழுப்பெயர், கல்விகற்கும் தரம் மற்றும் பிரிவு, தொடர்பு இலக்கம், முகவரி என்பவற்றுடன் வங்கி கணக்குப் புத்தகத்தின் முதல்பக்க பிரதியையும் இணைத்து அனுப்பி வைக்கவும். மேற்குறிப்பிட்ட தகவல்கள் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். வெற்றியாளர்களுக்கு 500/- ரூபாய் பணப்பரிசிலும் அனுப்புதல் தபால் செலவும் வழங்கப்படும். அனுப்பும் போது கடித உறையின் மேல்மூலையில் 'தென்னாடு வாசிப்போம்' என்று குறிப்பிட்டு அனுப்பவும்.

**கேள்விகள்:**

1. சிவபெருமான் சுந்தரருக்கு திருநடன கோலத்தில் காட்சி கொடுத்த தலத்தை குறிப்பிட்டு, சுந்தரர் பாடிய பதிகத்தின் முதல் பாட்டினை முழுமையாக எழுதுக?
2. சிவகாமி ஆண்டாருக்கு நிகழ்ந்த துன்பம் யாது? அதை நீக்கிய நாயனார் யார் ?
3. வெல்லாவெளி கோயில்தீவு சிவன்கோயிலின் இருப்புடன் தொடர்புடைய இலக்கிய ஆதாரங்கள் எவை?
4. சண்டேசுவரப் பெருமானைப் போற்றி, மறைஞானசம்பந்தர் சைவசமயநெறி நூலில் குறிப்பிட்ட குறளை எழுதுக?
5. நல்லூர் சைவ எழுச்சிப் போராட்டத்தில், ஆளுநரிடம் முன்வைத்த கோரிக்கைகள் எவை ?
6. தென்னாடு ஐம்பூதநாதருடைய பத்து போற்றி மந்திரங்களையும் எழுதுக ?
7. திருநாவுக்கரசு நாயனார் திருநீடூர் தலத்தில் பாடிய பதிகத்தின் முதல் பாட்டினை முழுமையாக எழுதுக ?
8. இறைவன், தமிழுக்கு திருப்பணி செய்தோருக்கு படிக்காசு நல்கினார் என்பதை சுந்தரர் எவ்வாறு குறிப்பிடுகின்றார்?
9. 'பண்பாட்டுத் தற்கொலை' என்ற ஆசிரியர் தலைப்பு கட்டுரையின் கருத்தை ஐந்து வரிகளில் சுருக்கமாக எழுதுக?
10. 'அருள் ஒளி பெறட்டும் நம் ஆதீனம்' என்ற ஆசிரியர் தலைப்பு கட்டுரையின் கருத்தை ஐந்து வரிகளில் சுருக்கமாக எழுதுக?

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி:**
**ஆடித் திங்கள் 15 ஆம் நாள் (31-07-2025)**

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,**
**தென்னாடு வீதி, கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
**+94 21 222 9722 | +94 70 770 1111**

# கடந்த இதழின் 'தென்னாடு வாசிப்போம்' போட்டியில் பரிசில் பெறுபவர்கள் விபரம்

வைகாசித் திங்கள் 58 வது இதழ் 'தென்னாடு வாசிப்போம்' போட்டியில், 134 மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர். அவர்களில் 61 மாணவர்கள் பத்து கேள்விகளுக்கும் சரியான விடைகளை எழுதி தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் விபரங்களை இங்கு பதிவிட்டுள்ளோம்.

**யா/கொக்குவில்**
**ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை**

1. செல்வி. சி. சிவாணி
2. செல்வி. டி. உதர்சிக்கா
3. செல்வி. ச. லிதுஜா
4. செல்வி. தெ. வர்ணிகா
5. செல்வி. டி.டெனிஷ்ரா
6. செல்வி.உ. அக்ஷயா

**யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி**

1. செல்வி. சு. கிஷானா
2. செல்வி. ச. மதுஷா
3. செல்வி. கு. சஜானா
4. செல்வி. க. பிரின்சிகா
5. செல்வி. ச. அஸ்மினா
6. செல்வி. டி. ரேனுஜா
7. செல்வி. க. காவியா
8. செல்வி. சி. நிக்சிகா
9. செல்வி. ஜெ. அஸ்மியா
10. செல்வி. நி. யஸ்வினி
11. செல்வன். க. ராகவன்
12. செல்வன். ந. சாருஜன்
13. செல்வி. ம. மேனுஜா
14. செல்வன். ச. சந்தோஸ்
15. செல்வி. செ. ஹாசினி
16. செல்வி. ப. டினோஜா

**கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி**

1. செல்வி. செ. நிஷிகா
2. செல்வி. சு.லதுசிகா

**யா/கனகராஜன் குளம்**
**மகா வித்தியாலயம்**

1. செல்வி. சு. சுகிர்தா

**யா/கொடிகாமம்**
**திருநாவுக்கரசு மத்திய கல்லூரி**

1. செல்வி. வ. சானுஜா
2. செல்வி. வி. மதுசாலினி
3. செல்வி. த. கபிசனா
4. செல்வி. அ. அனித்தா

**யா/உடுப்பிட்டி மகளீர் கல்லூரி**

1. செல்வி. அ. யதுமிதா
2. செல்வி. உ.சங்கீர்த்தனா
3. செல்வி. சி.நிஷானி
4. செல்வி. அ.காவியா
5. செல்வி. அ.கிஷானி
6. செல்வி. ச.டனுசுயா
7. செல்வி. க.கஜானா
8. செல்வி. கு.கோசிகா
9. செல்வி. ச.சயந்திகா
10. செல்வி. ப.கீர்த்தி
11. செல்வி. செ.சதுர்ஜா
12. செல்வி. ப.யர்சிகா
13. செல்வி. ஆ.சாதுர்யா
14. செல்வி. வ.அபிசிகா
15. செல்வி. த.தருஷ்னா
16. செல்வி. க.ஹம்சிகா
17. செல்வி. மு.தனுமிகா
18. செல்வி. ய.கீர்த்திகா
19. செல்வி. வி.கவிஷ்னா

**தி/மூ/ஸ்ரீ/சண்முக மகா வித்தியாலயம்**

1. செல்வி. கோ.கணிஸ்ரராஜ்
2. செல்வி. பி.மயூரிக்கா
3. செல்வி. ப.வினுஸ்கா
4. செல்வி. ர.சுஜிர்த்தா
5. செல்வன். சி.சுஜன்
6. செல்வன். தே.சதீஸ்சன்
7. செல்வி. சு.டனுஸ்கா
8. செல்வி. சு.நிறோஜன்
9. செல்வி. க.கவிஞ்ஞா
10. செல்வி. த.டினுஜா
11. செல்வி. த.சங்கவி
12. செல்வி. ர.கம்ஷனா
13. செல்வி. ப.அபிஷ்னா

# சொற்சிலம்பம்-4

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | 02 | | | | |
| 03 | | | | | | | |
| | | 04 | | 05 | | 06 | |
| | | | | | | 07 | |
| | | | | | | 08 | |
| 09 | | | | | | | |
| 10 | | | | | | 11 | |
| | | 12 | | | | | |

### இடமிருந்து வலம்

*01.* அண்மையில் தமிழிலும் திருக்குட நன்னீராட்டு நடைபெற்ற தமிழகத்தின் பிரபலமான முருகன் கோயில்
*03.* ஞானத்தின் குறியீடாக விளங்கும் விலங்கு
*04.* சமய தீக்கை என்பது சைவத்தின் நுழைவு ............ஆகும்.
*06.* வரம்பில் ஆற்றலுடைய பொருள்
*07.* சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையேயான பஞ்சாங்கப் பதம்
*08.* வேகம்
*09.* காமனின் இணை
*10.* அறிவை மறைப்பது
*11.* செல்வம்
*12.* அறுபடை வீடுகளில் ஒன்று

### மேலிருந்து கீழ்

*01.* மனதை ஒருநிலைப்படுத்த உதவுவது
*02.* நல்லூர் கோயிலிற்கு கொடிச்சீலை கொடுக்கும் மரபினர்
*05.* ஆண்டுகளுக்கு ஒருமுறை கோயில்களில் நிகழ்வது
*06.* பத்துப் பாடல்கள் அடங்கிய தொகுதி
*08.* இரும்பை உருக்கி அடிக்கும் இடம்

**பாடசாலை மாணவர்கள், மேலே உள்ள சொற்சிலம்பத்தை பிரதிசெய்து, அதனைப் பூர்த்தி செய்து, பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன், உங்கள் முழுப்பெயர், கல்விகற்கும் தரம் மற்றும் பிரிவு, தொடர்பு இலக்கம், முகவரி என்பவற்றுடன் வங்கி கணக்குப் புத்தகத்தின் முதல்பக்க பிரதியையும் இணைத்து அனுப்பி வைக்கவும். மேற்குறிப்பிட்ட தகவல்கள் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். வெற்றியாளர்களுக்கு 500/- ரூபாய் பணப்பரிசிலும் அனுப்புதல் தபால் செலவும் வழங்கப்படும். அனுப்பும் போது கடித உறையின் மேல்மூலையில் 'சொற்சிலம்பம்' என்று குறிப்பிட்டு அனுப்பவும்.**

**அனுப்பவேண்டிய இறுதித் திகதி:**
**ஆடித் திங்கள் 15 ஆம் நாள் (31-07-2025)**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,**
**தென்னாடு வீதி, கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
+94 21 222 9722 | +94 70 770 1111

# சொற்சிலம்பம்-3

**(கடந்த திங்கள் சொற்சிலம்பத்திற்கான விடைகள்)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 ஆ | 02 த | னூ | ர் | | 03 பா | 04 ச | ம் |
| 05 தீ | ண் | டா | மை | | 04 ர் | ங் | |
| ன | ட | | | | வ | கு | |
| ம் | னை | | 06 அ | மை | தி | | 07 பு |
| | | 08 எ | ன் | பு | | | ரா |
| 09 சூ | | | பு | | | | ண |
| ல | | | | 10 த | ர் | ம | ம் |
| 11 ம் | ல | றா | ற் | கு | ரு | தி | |

### இடமிருந்து வலம்

*01.* திருநாளைப் போவார் அவதரித்த திருத்தலம்
*02.* பசு அறிவை மறைப்பது
*05.* சைவத்தில் இச்சமுக அடக்குமுறை இல்லை
*06.* உலக மக்கள் அனைவரும் விரும்புவது
*08.* அன்புடையார் ............................ உரியார் பிறர்க்கு
*10.* இது தலைகாக்கும்
*11.* குறவஞ்சி பாட்டுடைய திருத்தலம் (திரும்பி)

### மேலிருந்து கீழ்

*01.* சைவ தலைமைபீடம்
*02.* பாவங்களின் கூலி
*03.* சத்தியின் திருப்பெயர்
*04.* இசைக்கருவி
*06.* இதுவே சிவம்
*07.* தொன்மையான விடயங்களை சொல்லும் நூல்
*09.* காவலுக்குரிய ஆயுதம்

### பரிசில் பெறுபவர்கள்

*தென்னாடு சொற்சிலம்பம் - 3 இல், 41 மாணவர்கள் பங்கு பற்றியிருந்தனர். அவர்களில் ஒருவர் மட்டுமே அனைத்து விடைகளையும் சரியாக பூர்த்தி செய்து தெரிவு செய்யப் பட்டுள்ளார்.*

**செல்வி. நவீனன் கவீர்னா**
**யா/கச்சாய் மகா வித்தியாலயம்**

# சிவபூமியில் சிவனைத் தேடி

## 400 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றுத் தொடர்புடைய அனலைத்தீவு - புளியந்தீவு நாகேசுவரன் சிவன் கோயில்



### திருத்தல அமைவிடம்

தீவுப் பிராந்தியத்தில் சைவப்பண்பாட்டின் மணித்தீவாக விளங்குவது அனலைத்தீவாகும். இத்தீவு வடக்குப் பிரதேச செயலாளர் ஊர்காவற்துறைப்பகுதிக்குள் அடங்குகின்றது. அனலைத்தீவின் தென்பகுதியில் உப்பு நீர் நிலத்தால் பிளவுபட்டிருக்கும் ஒரு சிறிய பரப்பளவைக் கொண்ட இடம் புளியந்தீவாகும். நிலம் சதுப்பாக இருந்தாலும் சிவனார் அருளால் நன்னீர் பயன் தரும் சோலைகள், காடுகள் நடுவவே இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

### புளியந்தீவு இறைவனின் சிறப்பு

ஈழத்திரு நாட்டில் சிவவழிபாட்டுடன் நாகவழிபாடு சிறப்புப் பெற்ற இடங்களில் புளியந்தீவும் ஒன்றாகும். இதனாலேயே கருவறையில் நாகராசேசுவரி அம்மன் உடனுறையாக நாகேசுவரன் சிறப்புப் பெற்று விளங்குகின்றார். இதேபோல் தமிழ் நாட்டிலும் கும்பகோணம் முதலான சிவன் கோயில்களில் இம்மூர்த்தியின் பெயர் போற்றப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

புளியந்தீவுக்கும் நயினாதீவுக்கும் ஏறத்தாள 400 வருடங்களுக்கு முந்திய தொடர்பு இருப்பதாகக் கூறுகின்றனர். போர்த்துக்கேயர் ஈழத்தைத் தங்கள் ஆதிக்கத்திற்குட்பட்ட காலத்தில் நயினாதீவு நாகபூசனி அம்மன் கோயில் அழிக்கப்பட்ட போது அங்கிருந்த சிவலிங்கத்தைப் புளியந்தீவில் மறைத்து வைத்து வழிபட்டு பின்பு புளியந்தீவிற்குரிய நாகேசுவர மூர்த்தியாகச் சித்தரிக்கப்பட்டுள்ளார். பாம்புகளின் இருப்பிடமாக விளங்கும் புளியந்தீவில் இதுவரை பாம்புகளால் குடிமக்களுக்கு அச்சம் ஊட்டிய சம்பவங்களும், தீண்டிய சம்பவங்களும் இதுவரை காலமும் இங்கு இல்லை என்று இங்குள்ள மூத்தோர் கூறுவதிலிருந்து மூர்த்தியின் சிறப்பு போற்றத்தகுந்தது.

இம்மூர்த்தியின் கீர்த்தி பற்றிப் பல வரலாற்றுச் சம்பவங்கள் பலராலும் உரைக்கப்பட்டு வருகின்றன. இதன்படி புளியந்தீவு நாகேசுவரன் பிணிகள் பல தீர்க்கும் வைத்தியநாதன் என்பதை உணர்ந்த பதஞ்சலி, வியாக்கிரமபாதர் போன்ற முனிவர்கள் இக்கோயிலிற்கு வழிபாடாற்றிட வந்ததாகவும், பின்னாளில் இன்னும் பல முனிவர்கள் இத்தீவின் பற்றைகளில் வளர்ந்திருந்த இயற்கை மூலிகைகளைக் கொண்டு நோய் நொடிகளைத் தீர்த்து வந்தார்கள். அந்த வகையில் புலி முகம் கொண்ட அரசன் ஒருவன் தனது சாபநோயிலிருந்து மீட்சிபெற முனிவ அருளாசியால் இம்மூர்த்தி எழுந்தருளியுள்ள தலத்தில் தங்கியிருந்து மூலிகையின் மகத்துவத்தாலும் சிவனருளாலும் புலிமுகம் மறைந்து மனித முகம் கிடைக்கப் பெற்றதாகவும் கூறப்படுகின்றது. இதனால் புளியந்தீவிற்கு **"புலியேத்தி"** என்று கூறுவதும் வழமையாகி விட்டது என்பர்.



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

மூர்த்தியின் சிறப்பிற்கு அணிவகுப்பது தலமரமும், தீர்த்தமும் ஆகும். இத் தலத்தின் மரங்களாக அரசும் கொன்றையும் விளங்குகின்றது. சேது தீர்த்தம் எனும் கடல் தீர்த்தமும், நாகபுஸ்கரணி எனும் திருக் கோணத்தீர்த்தமும் அமையப் பெற்றுள்ளது. இங்குள்ள கேணியின் நீர் மேலதிகமானவுடன் கடலுடன் கலப்பதனால் **"சங்கம் தீர்த்தம்"** எனவும் போற்றப்படுகின்றது. இத்தகைய தீர்த்தச் சிறப்பு நகுலகிரித் தீர்த்தத்திலும் காணப்படுகின்றது.

### திருத்தல வரலாறு

இக்கோயில் வரலாறு பற்றி பல்வேறு கர்ண பரம்பரைக் கதைகளும், மூர்த்தியின் அற்புதவரலாற்றுக் கதைகளும் ஊரவர் செய்திகளாகப் பேசப்பட்டுவருகின்றன. ஈழத்தின் மூத்த குடிகளான நாகர்கள் போற்றிய வணக்கம் நாக வணக்கமாகும். இதனை ஈழத்தின் பல பாகங்களிலும் கிடைத்துள்ள தொல்பொருட் சின்னங்கள் உறுதி செய்கின்றன. இதன் நீட்சியாக இன்று வரை நாக வணக்கம்





கிராமங்கள் தோறும் நாகதம்பிரான் வழிபாடாகவும் நாகலிங்கேசுவர வழிபாடகவும் வளர்ச்சி பெற்று வருகின்றது. இந்த அடிப்படையில் நயினாதீவு, புளியந்தீவு முதலிய தீவுகளில் நாகவழிபாடு இன்று வரை வளர்ச்சி பெற்று வந்துள்ளது. இன்றும் நயினாதீவில் நயினைபூசனி அம்மனை நாகம் வழிபட்டு வருவது வியப்புக்குரியது. சில இடங்களில் நாகவழிபாட்டின் தொடர்ச்சியாக சிவலிங்க வழிபாடு சிவநாகலிங்கம், நாகலிங்கம் ஆகிய வழிபாடாக

உருமலர்ச்சி பெற்று வந்துள்ளது. இந்நிலையில் புளியந் தீவிலும் நெடுங்காலமாக இங்குள்ள மக்களால் போற்றப் பட்டு வந்த நாகவழிபாடு, பின்னர் நாகேசுவரன் எனும் சிவவழிபாடாக மறுமாற்றம் அடைந்திருப்பதைக் கூறலாம்

ஈழத்தை போர்த்துக்யேர் கைப்பற்றிய காலத்தில் நயினை நாகபூசனி அம்மன் கோயில் தகர்க்கப்பட்ட போது, அங்குள்ளவர்கள் அம்மன் பூசித்த சிவலிங்கத்தை புளியந் தீவுக் காட்டினுள் நின்ற மரமொன்றில் ஒளித்து வைத் துப் பின்னர் நயினாதீவைச் சேர்ந்த நாகப்பனும், இராமு உடையான் என்பாரும் அவர்களுடன் கதிரவேலு, கண பதியும் சேர்ந்து அரசமரத்தின் கீழ் கொட்டில் கட்டி அச்சி வலிங்கத்தை அங்கு நிறுவி வழிபாடியற்றி வந்துள்ளனர். 1950 இல் நடந்த குடமுழுக்கு விழாவின் போது கோயில் காட்டுக்கற்களாலும், காரைச்சுண்ணாம்பினாலும் கட்டப்



பட்டு மூலவராக நாகதம்பிரானும், மகாமண்டபத்தில் நடராசப் பெருமானும், சிவகாமி அம்மையாரும் எழுந்தருளி அருள்சுரந்தார்கள் என்று கூறப்படுகின்றது.

பின்பு கோயிலின் கைங்கரியத்தில் அக்கறை கொண்ட அனலைதீவு மக்கள் புதிய கோயில் நிர்வாகத்தை அமைத்து, கோயிலைத் திருப்பணி புரிந்து புதுக்கி 1960 ஆம் ஆண்டு மீண்டும் ஒரு குடமுழுக்கு விழாவை நடத்தினார். 1998 இல் தூபி, அம்மன் சந்நிதி, மண்டபங்கள் முதலிய பகுதிகள் பதுக்கி மீண்டும் குடமுழுக்கு நடாத்தினர். அதன் நினைவாக புளியந் தீவு திருக்குடநன்னீராட்டு மலரும் வெளியிடப்பட்டிருந்தது. தற்போது இக்கோயில் புதுப்பொலிவுடனும், வடக்குத் தீவு மக்களின் அசையாத நம்பிக்கைக்குரிய தெய்வமாகவும் நிலைத்துள்ளது.

நயினாதீவையும் புளியந்தீவையும் இணைக்கும் கர்ண பரம்பரைக் கதையொன்று இச் சிவாலயத்தின் தொன்மை யையும் சிறப்பையும் எடுத்துக் கூறுகின்றது. அக்கதை கீழ்வருமாறு,

**“புளியந்தீவில் வசிப்பிடமான நாகம் ஒன்று தினமும் சிவனுக்குப் பூசிக்கப்பட்ட மலர் ஒன்றை தனது வாயால் கௌவிக் கொண்டு கடல் வழியாக நீந்திச் சென்று நயினாதீவில் உள்ள நாகபூசணி அம்மனை வழிபட்டு வந்ததாகவும் ஒரு நாள் அம்மனைத் தரிசிக்க வந்த நாகத்தை கருடன் வழிமறித்ததாக வும், இதனால் நாகம் வேறொரு கல்லில் பாதுகாப்புத் தேடி சுற்றிக் கொண்டிருந்த போது, இந்நிகழ்வை அவ்வழியால் சென்ற இரத்தினக்கல் வியாபாரி அவ்நாகத்தைக் காப்பாற்றி விட்டதாகவும், அதனால் அவ்வியாபாரிக்கு நாகம் அருள் கொடுத்ததாகவும் கூறப்படுகின்றது”** - (நன்றி: அனலைத் தீவு வாழ்வும் வளமும் எனும் நூல், நயினாதீவு, புளியந்தீவு கோயிற் சுவரில் வரையப்பட்ட ஓவியமும் )

## பூசையும் விழாக்களும்

அண்மைக்காலமாக இச் சிவாலயத்தில் வருடாவருடம் பெருந்திருவிழா சிறப்பாக இடம் பெற்று வருகின்றது. சிவாகம முறைப்படி பூசைகள் இடம் பெற்று வந்தாலும், மறுபுறம் ஆவணித் திங்கள் ஞாயிறுகளில் பாம்பிற்கு பால் வார்த்தல், நாகபூசை, சூரிய வழிபாடு செய்து வருகின்ற மரபு வழிபாடுகளும் இடம் பெற்று வருகின்றது. இங்கு சிவனி ரவு ஆனி உத்தரம், கழுவாய் விரதம், திருவாதிரை நடேசர் திருமுழுக்கு, சோமவாரம் போன்ற சிவ விரதங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. ஆவணித் திங்கள் நிறைமதியை தீர்த்தத் திருவிழாவாகக் கெண்டு பத்து தினங்கள் உற்சவம் இடம்பெற்று வருகின்றது.

திருவாதிரை நாளில் இவ்வாலயத்தில் பிட்டுப் பூசையும், மண் சுமந்த விழாவும் கொண்டாடப்பட்டு வருவது சிறப் பாகும். மிகப் பழங்காலத்தில் புளியந்தீவு நயினாதீவுப் பெரி யோர்கள் அப்பன் அம்மையும் பிணைத்து தெப்புத்திரு விழா நடத்தினார்கள். இத்திருவிழாவின் போது நயினை அம்மை புளியந்தீவு அப்பனிடம் எழுந்தருளி வருவது கண் கொள்ளாக் காட்சியாக விளங்கியது. இத்திருவிழா சிறிது காலம் தடைப்பட்டுக் கிடந்தது. தற்போது சிவன் கோயி லில் புதிய இறங்கு துறை அமைக்கப்பட்டு தெப்பத்திருவிழா நடைபெற்று வருகின்றது. இதைச் சங்கம் உற்சவம் என்று அழைக்கின்றனர்

## திருக்கோயில் வரலாற்று நூல்கள்

புளியந்தீவு சிவாலயம் பற்றி சிவனிரவு (சிவராத்திரி), ஏகாதசி ஆகிய விரத புராணங்கள் பாடிய புலவரால் இலங்கை மான்மியம் எனும் நூல் பாடப்பட்டுள்ளது, அதில் 400 பாடல்களில் இச்சிவாலயச் சிறப்புக்கள், தொன்மை, வர லாறு பற்றிய செய்திகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இவரது பாடல் ஒன்றில் ஈழத்தின் கரையோரப் பகுதிகளில் எட்டு சிவ ஈச்சரம் இருந்ததாகவும் அவற்றுள் வடக்கே நாகேசு வரம், நகுலேசுவரம், திருக்கேதீசுவரம் இருந்ததாகக் குறிப் பிடுகின்றார்.

முத்துக் குமாரசாமிப் புலவர் இச்சிவாலயத்தில் மிக நீண்ட காலம் தங்கியிருந்து நாகேசுவரனின் அருள் பெற்று. அவன் பெருமையை கவியாகவும் வடித்துள்ள பாடல்கள் தல முர்த்தியின் கீர்த்தியைப் புலப்படுத்துகின்றது. அனலைத் தீவு வாழ்வும் வளமும், புளியந்தீவு திருக்குடநன்னீராட்டு மலர் - 1998, பூர்வீக நயினை - 1949 கலாநிதி ஐயாத்துரை எழுதிய நூல் இக்கோயில்வரலாறுகள் பற்றி அறிந்து கொள்ள உதவும் இலக்கியச் சான்றுகளாகும்.

**“சந்திரனொடு சூரியன் தாமுடன்**
**வந்து சீர் வழிபாடுகள் செய்த பின்**
**ஐந்தலை அரவின் பணி கொண்டருள்**
**மைந்தர் போறும் மணி நாகேச்சரமே”**

**- அப்பர் தேவாரம்**

**திருச்சிற்றம்பலம்**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

## ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தம்பிரான்தோழர்




**"சுந்தரத் திருத்தொண்டத் தொகைத்தமிழ்
வந்து பாடிய வண்ண முரைசெய்வோம்"**

**திருமழபாடியில் கனவில் தோன்றிய எம்பெருமான்**

சுந்தரனார் காவிரியின் தென்கரையிலுள்ள கண்டியூரைத் தொழுது, வடகரையிலுள்ள திருவையாறு தலத்தில் பணிந்துப் பின்னர் மீண்டும் தென்கரையிலுள்ள பூந்துருத்தி, திருவாலம்பொழில் தலங்களில் பணிந்தேத்தி அன்றைய இரவு ஆலம்பொழிலிலுள்ள திருமடமொன்றில் தங்கித் துயில் கொள்கின்றார். கண்ணுதற் கடவுள் கனவில் எழுந்தருளி வந்து **'மழபாடி வருவதற்கு நினைக்க மறந்தாயோ?'** என்று அருள் புரிகின்றார்.

**"தேவர் பெருமான் கண்டியூர் பணிந்து திருவையாறதனை
மேவி வணங்கிப் பூந்துருத்தி விமலர் பாதம் தொழுதிறைஞ்சிச்
சேவில் வருவார் திருவாலம்பொழிலில் சேர்ந்து தாழ்ந்திரவு
பாவு சயனத்தமர்ந்தருளிப் பள்ளி கொள்ளக் கனவின்கண்"**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 71)**

**"மழபாடியினில் வருவதற்கு நினைக்க மறந்தாயோஎன்று
குழகாகியதம் கோலமெதிர் காட்டியருளக் குறித்துணர்ந்து
நிழலார் சோலைக் கரைப்பொன்னி வடபாலேறி நெடுமாடம்
அழகார் வீதி மழபாடி அணைந்தார் நம்பியாரூரர்"**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 72)**

தம்பிரான் தோழர் உளம் நெகிழ்ந்து மீண்டும் வடகரையிலுள்ள மழபாடி தலத்தினைச் சென்றடைகின்றார். அன்பர்கள் சூழ கோயிலினுள் சென்று பாம்பணியும் பரம்பொருளை உடலெலாம் புளகமுற வீழ்ந்துப் பணிகின்றார். இவ்விடத்தில் ஒரு சிறு நுட்பம், உலகியலில், நமக்கு மிக நெருக்கமானவர்கள் குறித்த முக்கியமான நாளையோ, நிகழ்வையோ மறந்திருந்துப் பின் அவர்கள் சிறிது ஏமாற்றத்துடன் நமக்கதனை நினைவூட்டுகையில், தர்ம சங்கடத்துடன் மறந்ததற்கான காரணத்தினை ஒருவாறு விளக்க முனைந்துப் பின்னர் அவர்களின் மன வருத்தம் நீங்குமாறு முன்னினும் இரு மடங்காக மகிழ்வுறச் செய்து நாமும் உடன் சேர்ந்து

மகிழ்வோம் அல்லவா?

இங்கு நம் சுந்தரனாரும் அதே நிலையில் மழபாடி முதல்வரின் திருச்சன்னிதியில் நின்று, ‘பொன் போலும் மேனியனே, புலித்தோலினை அணிந்து மின்னல்போலும் ஒளி பொருந்திய செஞ்சடையில் கொன்றை சூடி அருளும் தலைவனே, உணர்ந்து அடைதற்கரிய மாமணியே, மழபாடியுள் அற்புதமாய் எழுந்தருளியுள்ள மாணிக்கமே, அடியேனுக்குற்ற தோழராகவும் தாயாகவும் தலைவராகவும் இறைவராகவும் யாவுமாகவும் விளங்கும் தன்மையனே, உனையன்றி இனி வேறெவரை நினைத்து விடப் போகின்றேன் ஐயனே?’ என்று கண்ணீர் பெருக்கித் திருப்பதிகத்தினால் போற்றுகின்றார்,



**பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து**
**மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே**
**மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே**
**அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே**
**- (சுந்தரர் தேவாரம் - திருமழபாடி - திருப்பாடல் 1)**

**‘தன்னேரில்லாப் பதிகமலர் சாத்தித் தொழுது’** என்று இப்பதிகம் ஒப்புவமையில்லாத திருப்பதிகம் என்பதனை போற்றுகின்றார் தெய்வச் சேக்கிழார்.

### திருஆனைக்காவில் அற்புத அருட்காட்சி

சுந்தரர், காவிரியின் வடகரையிலுள்ள மழபாடியைத் தொழுதுப் பின் திருவானைக்கா தலத்தினைச் சென்றடைகின்றார். எதிர்கொண்டு வணங்கிய திருத்தொண்டர்களை எதிர்வணங்கி ஆலயத்துள் சென்று, சிலந்தியும் வெள்ளை யானையும் வழிபாடு செய்த நீர்த்திரள்நாதரின் (ஜம்புகேஸ்வரர்) திருச்சன்னிதியினை அடைகின்றார்.

உமையன்னை பணிந்தேத்திய அண்டர் நாயகரின் திருவடி மலர்களில் காதலொடு வீழ்ந்தெழுந்து, உடலெங்கும் புளகமுற, பெருநெகிழ்ச்சியினால் கண்ணருவி வெள்ளமெனப் பெருகித் திருமேனியெங்கும் வழிந்தோட, தன்வயமற்ற நிலையில் விம்மித் தொழுகின்றார்,

**“செய்ய சடையார் திருவானைக்காவில் அணைந்து திருத்தொண்டர்**
**எய்த முன் வந்தெதிர் கொள்ள இறைஞ்சிக் கோயிலுள் புகுந்தே**
**ஐயர் கமலச் சேவடிக்கீழ் ஆர்வம் பெருக வீழ்ந்தெழுந்து**
**மெய்யு முகிழ்ப்பக் கண்பொழிநீர் வெள்ளம் பரப்ப விம்முவார்”**
**- (ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - திருப்பாடல் 75)**

**‘மறைகளாயின நான்கும்’** என்று துவங்கும் திருப்பதிகத்தினால் ஆனைக்காவுடை ஆதியைப் போற்றி செய்கின்றார். ஆனைக்கா அண்ணலின் திருவடிகளைத் தொழும் அன்பர்கள் ‘தன்னையும் ஆளாக உடையவர்’ என்று திருப்பாடல்கள் தோறும் பணிந்தேத்திப் பரவுகின்றார்,

**மறைகளாயின நான்கும் மற்றுள பொருள்களும் எல்லாத்**
**துறையும் தோத்திரத்திறையும் தொன்மையும் நன்மையும் ஆய**
**அறையும் பூம்புனல் ஆனைக்காவுடை ஆதியை நாளும்**
**இறைவன் என்றடி சேர்வார் எம்மையும் ஆளுடையாரே**
**- (சுந்தரர் தேவாரம் - திருவானைக்கா - திருப்பாடல் 1)**

7ஆம் திருப்பாடலில் சுவையான வரலாறொன்றினையும் பதிவு செய்கின்றார், சிவபெருமானின் மீது அதீத பத்தி பூண்டிருந்த சோழ மன்னனொருவனின் முத்துமாலை காவிரியில் தவறி விழுந்து ஆற்றோடு சென்று விடுகின்றது. மனமிக வருந்தும் அவ்வேந்தன் ஆனைக்கா அண்ணலிடம், **‘அடியவனின் ஆரத்தை ஏற்றருள் செய் ஐயனே’** என்று வேண்ட, அந்த முத்துமாலையைத் திருமஞ்சனக் குடத்தில் புகுமாறு செய்து, திருமஞ்சன சமயத்தில் தன்னுடைய திருமுடியில் அதனை சூடிப் பேரருள் புரிந்த அருட்திறத்தினையும் போற்றிப் பரவுகின்றார்.

**தாரமாகிய பொன்னித் தண்டுறை ஆடி விழுத்து**
**நீரில் நின்றடி போற்றி நின்மலா கொள்ளென ஆங்கே**
**ஆரம் கொண்டஎம் ஆனைக்காவுடை ஆதியை நாளும்**
**ஈரம் உள்ளவர் நாளும் எம்மையும் ஆளுடையாரே**
**- (சுந்தரர் தேவாரம் - திருவானைக்கா - திருப்பாடல் 7)**

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**படம்-தேவராஜன் நடராஜன்** அவர்களின் முகநூலில் இருந்து

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



சிவஞானச் செல்வர். மருத்துவர் ஈசான பிரதாபன் தேசிகர்

**சண்டேசுவரப்பெருமானுக்கும் சண்டேசுவர நாயனாருக்கும் உள்ள தொடர்பு என்ன? இருவரும் ஒருவரா?**

சோழநாட்டில் சேய்ஞுலூரில் விசாரசருமர் என்னும் குழந்தை மணலால் சிவலிங்கம் அமைத்து பசுக்களின் பாலால் அச்சிவலிங்கத்தைத் திருமுழுக்காட்டி வணங்கிக் கொண்டிருந்த போது, விசாரசருமடைய தந்தையார் எச்சதத்தன் தமது குழந்தையின் வழிபாட்டுத் திறத்தை உணராது, பாற்குடத்தை காலால் இடறியபோது, சிவபூசைக்கு இடர்செய்தது கண்டுத் தண்டிக்கத் திருவுள்ளம் கொண்டு, அங்கிருந்த கோல் ஒன்றினை எடுத்து அத்தாள்கள் மீது எறிய, அக்குழந்தையின் சிவபூசைச் சிறப்பால் அக்கோல் மழுவாகி எச்சதத்தனின் தாள்கள் இரண்டையும் வெட்டியது. தமது தந்தையின் தாள் இரண்டும் வெட்டுண்டபோதும் ஒருசிறுதும் கலக்கம் இன்றித் தம் சிவபூசையைத் தொடர்ந்தார்.

சிவாகமவழிச் சிவபூசையில் சிறுவன் விசாரசருமர் கொண்டிருந்த அளவிலா ஈடுபாட்டினால் சிவபூசைக்கு இடையூறு செய்தவர் தமது தந்தையேயானாலும் தண்டிக்கப்படவேண்டும் என்று கருதிக் கோலெடுத்துத் தண்டிக்க திருவுள்ளம் கொண்டார். எனினும் அவருடைய சிவபூசைச் சிறப்பினால் அக்கோல் மழுவாகித் தந்தையின் கால்கள் இரண்டையும் வெட்டியது. தந்தைக்கு ஏற்பட்ட கதியால் சிறிதும் கலங்காது தமது சிவபூசையையும் தொடர்ந்தார். அவருடைய சிவாகமச் சிவபூசைத் திறத்தைப் போற்றுமாறு, சிவபெருமான் தோன்றித் தமது நிர்மாலியங்களை ஏற்றுக் கொள்ளும் சண்டேசுவரப்பதவியை விசாரசருமருக்குக் கொடுத்தருளிச் சண்டேசுவர நாயனாராக்கியருளினார். சண்டேசுவர நாயனார் என்பவர் சண்டேசுவரப் பதவி பெற்ற ஒருவர். திருக்கோயிலில் விளங்கும் சண்டேசுவரப்பெருமான் என்பது சண்டேசுவரப் பதவியாகும்.

சிவாலயங்களில் இவர் த்வனிச் சண்டேசுவரர் என்றும், பிள்ளையார் திருக்கோயிலில் கும்ப சண்டேசுவரர் என்றும், முருகன் திருக்கோயில்களில் சுமித்ர சண்டேசுவரர் என்றும், உமாதேவியார் திருக்கோயில்களில் தாரிகா(யமநீ) சண்டேசுவரி என்றும், சூரியப்பூசையில் விளங்கும் சண்டேசுவரர் தேஜஸ் சண்டேசுவரர் என்றும், வைரவரப்பெருமான் திருக்கோயிலில் விளங்கும் சண்டேசுவரர் விஜயவடுக சண்டேசுவரர் என்றும், மகாசாத்தனுக்கு சாஸ்தேஜர் என்றும் சண்டேசுவரப் பதவி உடையோர் போற்றப்படுவர். எனவே, சிவாலயத்தில் அறுபத்து மூவர் சந்நிதியில் விளங்கும் சண்டேசுவர நாயனார் என்பவர் விசாரசருமராக விளங்கிச் சிவபூசைக்கு இடையூறு செய்த தம் தந்தையையே தண்டித்து சண்டேசுவரப் பதவி பெற்ற சிவனடியார். சண்டேசுவரர் சந்நிதியில் விளங்கும் சண்டேசுவரர் என்பவர் த்வனிச் சண்டேசுவரராவார். தில்லைச் சிற்றம்பலத்திலுள்ள சண்டேசுவரர் என்பவர் பிரமதேவரேயாகும்.

சதுர்முக சண்டீசராக இவர் விளங்குகின்றார். அஃதாவது, சிதம்பரத்தில் விளங்கும் சண்டேசுவர மூர்த்தம் என்பது, பிரமதேவனுக்கு வழங்கப்பட்ட த்வனிச் சண்டேசுவரப் பதவியாகும். அதுபோல், இயமன் யமசண்டீசராக திருவாரூர் திருத்தலத்தில் விளங்குகின்றார். ஏனைய பெரும்பாலான சிவாலயங்களில் விளங்கும் த்வனிச் சண்டேசுவரர் என்பவர் சண்டேசுவரப் பதவி பெற்ற விசாரசருமராகிய சண்டேசுவர நாயனாராகக் கொள்ளும் மரபே விளங்குகின்றது. சிவபெருமானுடைய அறுபத்து நான்கு மகேசுவர மூர்த்தங்களில் சண்டேசுவர அனுக்கிரகர் என்பது ஒன்றாகும். அஃதாவது, விசாரசருமருக்கு சண்டேசுவரப் பதவி அளித்த திருக்கருணை வடிவமாகும்.

**சண்டேசுவரப்பெருமானுக்குக் குறுக்காகச் சென்று வழிபடலாமா? சண்டேசுவரப்பெருமானை முழுமையாக வலஞ் செய்து வழிபடலாமா?**

சிவாலயங்களில் சண்டேசுவரர் சன்னதி, கருவறைக்கு இடப்புறமாக கோமுகி அமைந்திருக்கும் இடத்திற்கு அருகே அமைக்கப்படுகிறது. பொதுவாக கோமுகிக்கும், கருவறைக் கோட்டத்தில் உள்ள துர்க்கைக்கும் இடையே அமைக்கப்படுகிறது. இவ்வாறு சைவாலயத்தில் விளங்கும் சண்டேசுவரப்பெருமானுக்கு குறுக்காகச் செல்லுதல் கூடாதென்பது ஆன்றோர் மரபு. ஆன்ம இடபதேவருக்கும் சிவபெருமானுக்கும் குறுக்காலே செல்லுதல் கூடாதென்பதுபோல், சண்டேசுவரப் பெருமானுக்கும் கருவறைக்கும் குறுக்காகச் செல்லுதல் கூடாதாகும். எனவே, முழுமையாக சண்டேசுவரர் சன்னிதியை வலம் வருதல் கூடாது. ஆன்ம இடபதேவர் என்பவர் பக்குவ உயிராகும். சிவபெருமானையே வழிபட்டு இன்புற்றிருப்பவர் என்னும் பாவனையினால், அவருடைய திருக்கண் பார்வை சிவபெருமானை நோக்கியே அமைந்து, சிவானந்தத்தில் இன்புற்றிருக்கும். அதனைக் குழப்புதல் கூடாது என்பதனால், ஆன்ம இடபதேவருக்குக் குறுக்கால் செல்லக்கூடாதென்பது விதி. அதுபோல், சண்டேசுவரப்பெருமானும் சிவபூசையில் ஒன்றியிருப்பவர். கருவறைக்கு அருகில் இருக்கும் அவருடைய சன்னிதிக்கும் கருவறைக்கும் இடையில் குறுக்காக வலம் வரும்போது, அவருடைய சிவபூசைக்கு குறுக்காகச் சென்ற கதி ஏற்படும் என்பதனால், அங்ஙனம் செல்லக் கூடாது என்பது ஆன்றோர் விதித்த மரபாகும்.

திருச்சிற்றம்பலம்



தென்னாடு
செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு. சிவ. செந்தமிழாதன், இளம்புலவர் - தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 575 2551 / aathan@thennadu.org



# சைவம் எழுச்சி காணட்டும்!

கடந்த ஆனித் திங்கள் மக நட்சத்திரத்தில் மாணிக்க வாசகரது குருபூசை தினத்தை நாம் கைக்கொண்டோம். சைவத்தமிழ் வரலாற்றைப் பொலிவுறச் செய்த மகான்களில் மாணிக்கவாசகர் உன்னதமானவர். தன்னைத் தானே **"சிவனார் தொண்டன்"** என்று அடையாளப்படுத்திய இவர், சைவ சமயத்தை ஆழமாக உணர்ந்தவர், அதை ஏற்றுக்கொண்டு வாழ்ந்தவர், அதனைப் பரப்பியவர் எனும் வகையில் சைவத்தின் முழுமையான சாயலாக விளங்கியவர்.

மாணிக்கவாசகரின் வாழ்க்கை, கல்வி, பண்பாடு, ஆளுமை என அனைத்தும் அதீதம். அரசசபையில் மந்திரியாக இருந்தவர் ஆனால் இறைவனது அழைப்பை உணர்ந்தவுடன் மந்திரிப் பதவியைத் துறந்தார். **"தொண்டர் ஆவது சாலப் பெரிது"** என்று எண்ணிய அவர், நம் எல்லோருக்கும் **"சிவபத்தியை"** அனுபவிக்கக் கூடிய வழியைக் காட்டினார்.

இது இன்றைய அதிகார பீடங்களில் இருப்பவர்கள் உணர வேண்டிய செய்தியாகிறது. தொண்டு செய்யும் தன்மை தான் நாம் பெறும் உயர் அதிகாரம் என்பதை புறப்பற்று நீங்கி நாம் எல்லோரும் உணர்தல் நன்று.

இறைவனை மீதான அவரது நெஞ்சார்ந்த பத்தியும், தியானமும், அவரது பாடல்களால் வெளிப்பட்டன. **"திருவாசகம்", "திருக்கோவையார்"** போன்ற ஆன்மீக காவியங்கள் தமிழின் ஒளியை உயர்த்தின. **"திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்"** என்பது தவிர்க்கமுடியாத உண்மை.

மாணிக்கவாசகர் சைவ இலக்கியத்தில் ஒரு மாற்றத்தை உருவாக்கிய மிகப் பெரிய சிந்தனையாளர். அவர் வாழ்ந்த காலத்தில் சமயக் குழப்பங்கள், புறமதக் கோட்பாடுகளின் ஆதிக்கம் ஆகியவை பெருமளவில் காணப்பட்டன. இப்படியான சூழ்நிலையில், தெய்வீக உணர்வுடன் பாடிய திருவாசகம் வழியாக மக்கள் மனங்களில் சைவ ஆன்மீக விழிப்புணர்வை ஊட்டியவர் மாணிக்கவாசகர்.

அவரது பாடல்கள் நாத்திகக் கோட்பாடுகளை எதிர்த்து, சிவபத்தியின் மாபெரும் அழகை வெளிப்படுத்தின. திருவாசகம் புவியியல் சமய பேதங்களைக் கடந்து அனைவருக்கும் ஏற்ற ஆன்மீகக் கருத்துகளைத் தந்தன.

மாணிக்கவாசகர் சொல்வதெல்லாம் மொழி அல்ல, அது விளைவு, அது உணர்வு, அது சிவமயமான பேரன்பு. அவரது பாடல்கள் இன்றும் கோயில்களில் ஒலிக்கின்றன, வீடுகளில் வாசிக்கப்படுகின்றன. அதே நேரம் அவை இளைஞர்கள் இதயங்களிலும் பதிக்கப்பட வேண்டும்.

மாணிக்கவாசகர் போல் வாழ முயற்சிப்பது நம் வாழ்வின் தலைசிறந்த இலக்கு. அவர் காட்டிய பத்தி, இறைஅருள், அடக்கம், தியானம், உண்மை ஆகிய பண்புகள், இன்றைய தலைமுறைக்கும் வழிகாட்டும் ஒளியாயிருக்கின்றன.

அதனால் தான், மாணிக்கவாசகரது குருபூசை தினத்தை சைவ எழுச்சி நாளாக எல்லா சைவ பாடசாலைகளிலும் கைக்கொள்ள வேண்டும் என்ற சிந்தனை உதயமாகின்றது. இன்றைய தலைமுறையும் மாணிக்கவாசகரின் வழியில் பயணிக்க வேண்டிய அவசியம் உள்ளது. ஆன்மிகம், மொழி, பண்பாடு ஆகிய மூன்றையும் ஒன்றிணைக்கும் அவர் காட்டிய பாதை, சைவ மீள் எழுச்சிக்கு புதிய அரங்கம் அமைக்கட்டும்.

**திருச்சிற்றம்பலம்**

# திருநீற்றுச் சார்புடைய ஈழச்சான்றார் ஏனாதி நாத நாயனார்



செல்வி.
நவிசா ஈஸ்வரானந்தம்
கலைமாணி

சைவப்பண்பாட்டின் பேரடையாளமாகவும், சிவசின்னமாகவும் திகழும் திருநீற்றில் எல்லையில்லா பத்தி உடையவர் பத்தி இலக்கிய காலத்திலும் படைத்தலைவர், **'ஏனாதி"** என்று அழைக்கப்பட்டவர் வாள் வித்தையை போதிக்கும் அரசகுல ஆசான் வாள்வித்தை பயிற்சியால் தமக்கு வரும் வளங்களையெல்லாம் நீறணிந்த அடியார்களுக்கு அளித்தவர் பகைவன் நீதியின்றி ஆயுதம் பிடித்து தம்மை கொல்லப் புகுந்த போது அதனைத் தடுத்து அவரைக் கொல்வதற்கு வல்லவனாய் இருந்தும் திருநீறு இட்ட அடியவரின் விருப்பம் நிறைவேற போர் புரிவது போல நின்று திருநீற்றின் மேல் உள்ள பத்தியால் தன் இன்னுயிரை தியாகம் செய்தவர் **"ஏனாதி நாதான் தன் அடியார்க்கும் அடியேன் என்று"** என சுந்தரமூர்த்தி சுவாமிகளால் போற்றப்பட்டவர்.

இத்தனை சிறப்புக்களும் பெருந்தியவராக சோழமண்டலத்தின் எயினனூரில் ஈழச்சான்றவர் குலத்தில் பிறந்தவர் ஏனாதி நாயனார் ஆவார். இவரை,

**வேழக் கரும்பினொடு**
**மென்கரும்பு தண்வயலில்**
**தாழக் கதிர்ச்சாலி**
**தானோங்குந் தன்மையவாய்**
**வாழக் குடிதழைத்து**
**மன்னியஅப் பொற்பதியில்**
**ஈழக் குலச்சான்றார்**
**ஏனாதி நாதனார்**

**- (திருத்தொண்டர்புராணம்:12:09:02)**

என சேக்கிழார்ப் போற்றிப் பாடியுள்ளார்.

அரசர் குலத்திற்கு வாள்வித்தை கற்பிக்கும் சிறந்த ஆசிரியராக விளங்கிய இவரிடம் பரந்து விரிந்த பல பாகங்களில் இருந்து அரசர்கள் வருகை தந்து வாள் பயிற்ச்சி பெறுமளவிற்கு வலிமைமிகு வாள்வீச்சுக்கு சொந்தக்காரன். பல போர்க்களம் கண்ட இவர் போர்க்களத்தில் சிவனடியாரைக் கண்டால் கொல்லாது சிவனடியாரை சிவனாக மதித்து அவ்விடம் விட்டு விலகுவார்

இவர் திருநீற்றின் மீது தீராத பத்தி கொண்டவர். ஏனாதி நாயனார் ஓர் சிறந்த வாள் வித்தை வீரர் ஆவார். அதனால்,



அவ்வாற்றலை பல மன்னர்களுக்குப் பயிற்றுவித்து வந்தார். அதன் மூலம் கிடைக்கும் செல்வங்களைச் சிவனடியார்களுக்கு உபசரிப்பு செய்து கொண்டு வந்தார். இச்சூழலில் வாட்படை பயிற்றும் ஆசிரியர் தொழிலை மேற்கொண்டு, வாழும் காலத்தில் வாள் பயிற்சி பெற விரும்பும் அனைவரும் அவரிடம் சென்றனர். இதனால் இவரது தாய் வழி உறவினரான அதிசூரன் என்பவனும் அத்தொழில் செய்து வந்தான். அவனுக்கு வருமானம் குறைந்தது அதனால் ஏனாதிநாதர் மீது பொறாமை கொண்டு, அவர் மீது போர் தொடுக்கச் சென்றான். ஏனாதிநாயனார் போர்க்கோலம் பூண்டு ஏறு போல் புறப்பட்டார். அவருடன் வாள் பயிற்சி பயின்ற காளையர்களும் வாள் வீரர்களாகப் படை சூழ களத்திற்குச் சென்றனர். போர் ஆரம்பமானது. வில் வீரர்களும் வால்படை வீரர்களும் தன்னுடைய உயிரைப் பொருட்டாக மதிக்காமல் போர் புரிந்தனர்.

போரில் கால் முன்னும் பின்னுமாக வைத்து போரிட்டு முதலில் காலை வெட்டி பின் உடலை வெட்டுகின்ற போர் நுட்பத்தை பயன்படுத்தினார்கள் என்பதை **"நீள் இடை முடுகி நடந்து எதிர் நேர் இருவரில் ஒரு வன் றொடர் தாளிரு தொடை அற முன் பெயர் சாரிகை."** (திருத்தொண்டர்புராணம்:12:09:19) என்ற பாடல் மூலம் அறிய முடிகிறது. வால், அம்பு, கேடயம் போன்ற பல போர்க்கருவிகள் பயன்படுத்தப்பட்டதையும் திருத்தொண்டர்புராணம் மூலம் அறிய முடிகிறது. ஏனாதிநாயனார் புராணத்திலே சேக்கிழார் போர்க்களத்திற்கு ஞாட்பு என்ற சொற்தொடர்களால் சுட்டிக்காட்டியுள்ளார் என்பதை **"எதிர்ந்த ஞாட்பின் கண்"** (திருத்தொண்டர்புராணம்:12:09:26) என்ற வரி புலப்படுத்துகிறது.

ஏனாதிநாதரின் **"வட்ட அணையில்.."** (திருத்தொண்டர்புராணம்:12:09:29) எனப்படும் வாள் வீசும் வீரத்திற்கு முன்பு நிற்க முடியாமல் **"முட்டாதார் கொல் களத்தை விட்டு நிலைப்பட்ட மெய் உணர்வு நேர்ப்பட்ட போதில்"** (திருத்தொண்டர்புராணம்:12:09:27) என போர்க்களத்தை விட்டு மெய்உணர்வு ஏற்பட்டால் ஆணவம் முதலான மலங்கள் நீங்குவது போல புறமுதுகு காட்டி ஓடினான் அதிசூரன். வெற்றி பெற்று திரும்பினார் ஏனாதிநாதர். அதிசூரனுக்கு பகைமை உணர்வு மாறவே இல்லை. வளர்ந்து கொண்டே இருந்தது. இந்நிலையில் அதிசூரன் சூழ்ச்சியால் மீண்டும் போர் புரிய ஏனாதிநாதரை அழைத்தான். அப்பொழுது, அவரை நேர் பாதையில் வெல்ல முடியாது என்று எண்ணி, அவரைக் கொல்லக் கருதினான். போர் நடக்க இடம், நேரம் பார்த்துக் கூறினான். அம்முடிவுக்கு ஏனாதி நாயனாரும் சம்மதித்தார்.

குறித்த நேரமும் நாளும் வந்தது. போர் புரியும் இடத்திற்குச் சென்றனர். அங்கே ஏனாதி நாயனார் அதிசூரனுக்காகக் காத்துக் கொண்டிருந்தார். போர் தொடங்கியது. புலியைப் போல பாய்ந்து சண்டை செய்தார் ஏனாதி நாயனார். அதிசூரன் அவரின் வாள் வீச்சுக்குப் பயந்து, பதுங்கிப் பதுங்கி, ஒதுங்கி ஒதுங்கி, சண்டை செய்தான். அவர் தன் வாளால் உடலைக் கிழிக்கும் தருணம் தன்னுடைய உடலை மறைத்துக் கொண்டிருந்த கவசத்தையும் கேடயத்தையும் விளக்கினான். திருநீறு அணிந்த முகத்தைப் பார்த்த நாயனாரின் வீரம் பத்திக்கு அடிமையானது. இதனை சேக்கிழார் திருத்தொண்டத் தொகையிலே,

**கைவா ளுடன்பலகை**
**நீக்கக் கருதியது**
**செய்யார் நிராயுதரைக்**
**கொன்றா ரெனுந்தீமை**
**எய்தாமை வேண்டும்**
**இவர்க்கென் றிரும்பலகை**
**நெய்வா ளுடனடர்த்து**
**நேர்வார்போல் நேர்நின்றார்**
**- (திருத்தொண்டர்புராணம்:12:09:39)**

என இறக்கும் தருவாயிலும் திருநீற்றின் மேல் கொண்ட பத்தியை கைவிடவில்லை என்ற அவரின் உயர்ந்த பண்பை எடுத்துப் பாடி உள்ளார்.

அக்கணம் தன் ஆயுதத்தை கீழே போடுவோம் என்ற சந்தர்ப்பத்தில் நிராயுத பாணியை கொன்றுவிட்டேன் என இந்த திருநீறு பூசிய அடியார் வருந்துவாரே என்று ஆயுதத்தை கையில் வைத்து போர் செய்வது போல் நிற்க, தருணம் பார்த்து காத்திருந்த அதிசூரன் தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டான். நாயனாரின் உயிர் பிரிந்தது. அவ்வேளை எம்பெருமான் தோன்றி **'வாள்வித்தையில் மட்டும் அல்ல பத்தியில் மிக உயர்ந்தவன் ஏனாதி நாதன்'** என்று கூறி இறைவன் மறைந்தார். சிவனடியாரால் கொல்லப்பட்டதால் சஞ்சித வினை நீங்கப்பட்டு புரட்டாசித் திங்கள் உத்தராட்டாதி நாண்மீன் நன்னாளில் முத்திப் பேறு பெற்றார்.

சைவத்தின் மேலான செல்வமாகிய திருநீற்றை மேனியில் பூசியவரை சிவனாக மதித்து போற்றி வழிபடுதல் முத்திக்கு வழிகாட்டும் என்பதை தன் வாழ்வியலில் வாழ்ந்து காட்டியவராக ஏனாதி நாத நாயனார் திகழ்கின்றார் என்றால் மிகையில்லை.

**திருச்சிற்றம்பலம்**

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு பெரிய நாயகியம்மை உடனுறை ஆபத்சகாயேசுவரர் - திருஅன்னியூர்

## தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 22 ஆவது திருக்கோயில் திரு அன்னியூர்

**" பழுகுந் தொண்டர்வம் அழுக னன்னியூர்க்**
**குழகன் சேவடி தொழுது வாழ்மினே. "**

திருமணத் தடைகள் நீங்கி, விரைவில் திருமணம் கூடிட அருள்புரியும் அருள்மிகு பெரிய நாயகியம்மை உடனுறை ஆபத்சகாயேசுவரர் பெருமான் உறையும் அற்புதத் தலமே திருஅன்னியூர் திருத்தலம்.

**அமைவிடம்: நாகப்பட்டினம், தமிழ்நாடு.**

மயிலாடுதுறையிலிருந்தும், நீடூரிலிருந்தும் செல்லலாம். மயிலாடுதுறையிலிருந்து மணல்மேடு செல்லும் பேருந்து இவ்வூர் வழியாகச் செல்கிறது. மயிலாடுதுறையிலிருந்து இத்தலம் 8 கி.மீ. தொலைவில் உள்ளது.

**இறைவர் திருப்பெயர்: ஆபத்சகாயேசுவரர், இலிகுசாரண்யேசுவரர், அக்னீசுவரர், பாண்டதவேசுவரர், இரதீசுவரர்.**
**இறைவியார் திருப்பெயர்: பிருகந்நாயகி, பெரியநாயகி.**
**கோயில் மரம்: எலுமிச்சை மரம்**
**தீர்த்தம்: சூரிய தீர்த்தம், வருணதீர்த்தம், அக்னிதீர்த்தம் (இரண்டும் ஒன்றே).**
**வழிபட்டோர்: வருணன், அக்கினி, சூரியன், ரதி, பாண்டவர், சம்பந்தர், அப்பர், சேக்கிழார் முதலியோர்.**
**பாமாலை: சம்பந்தர், அப்பர், சேக்கிழார்.**

**திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்**
**திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம்**

**மன்னி யூரிறை சென்னி யார்பிறை**
**அன்னி யூரமர் மன்னு சோதியே**

**பழுகுந் தொண்டர்வம் அழுக னன்னியூர்க்**
**குழகன் சேவடி தொழுது வாழ்மினே**

**நீதி பேணுவீர் ஆதி யன்னியூர்ச்**
**சோதி நாமமே ஓதி யுய்ம்மினே**

**பத்த ராயினீர் அத்த ரன்னியூர்ச்**
**சித்தர் தாள் தொழ முத்த ராவரே**

**நிறைவு வேண்டுவீர் அறவ னன்னியூர்**
**மறையு ளான்கழற் குறவு செய்ம்மினே**



**இன்பம் வேண்டுவீர் அன்ப னன்னியூர்**
**நன்பொ னென்னுமின் உம்பராகவே**

**அந்த ணாளர்தம் தந்தை யன்னியூர்**
**எந்தை யேயெனப் பந்த நீங்குமே**

**தூர்த்த னைச்செற்ற தீர்த்த னன்னியூர்**
**ஆத்த மாவடைந் தேத்தி வாழ்மினே**

**இருவர் நாடிய அரவ னன்னியூர்**
**பரவு வார்விண்ணுக் கொருவ ராவரே**

**குண்டர் தேரருக்கு அண்ட னன்னியூர்த்**
**தொண்டு ளார்வினை விண்டு போகுமே**

**பூந்த ராய்ப்பந்தன் ஆய்ந்த பாடலால்**
**வேந்த னன்னியூர் சேர்ந்து வாழ்மினே (01-96)**

**திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகம்**

**பாற லைத்த படுவெண் தலையினன்**
**நீற லைத்தசெம் மேனியன் நேரிழை**
**கூற லைத்தமெய் கோளர வாட்டிய**
**ஆற லைத்த சடையன்னி யூரனே. (05-08)**

### திருத்தலச் சிறப்பு

திருஅன்னியூரில் எழுந்தருளியுள்ள ஆபத்சகாயேசுவரர், தேவாரப் பாடல் பெற்ற பெருமைமிக்க சிவத்தலமாக விளங்குகிறது. பத்தர்களின் துன்பங்களைப் போக்கி, ஆபத்தில் துணையாக நிற்பதனால், **"ஆபத்சகாயேசுவரர்"** எனத் திகழ்கிறார். திருமணத் தடைகள், கல்வித் தடை, நோய்கள்



போன்ற துன்பங்கள் நீங்க இத்தலத்தில் வழிபாடு செய்யப்படுகிறது.

இத்தலத்தில், இரதிதேவி தவமிருந்து, இறைவனை உருக்கச் செய்து மன்மதனை மீண்டும் உயிருடன் பெறும் பாக்கியம் பெற்ற வரலாறு காணப்படுகிறது. இதனால் இங்குள்ள இறைவன் "இரதீசுவரர்" என்றும் அழைக்கப்படுகிறார். மூலவர் சுயம்புவாக தோன்றி, யானையின் பின்புறம் போல் அமைப்பு கொண்ட விமானத்தின் ( கஜபிருஷ்ட விமானம்) கீழ் அருள்புரிகிறார். மேலும், இரட்டை தென்முகக்-கடவுள்களை (தக்ஷிணாமூர்த்தி) கொண்ட திருத்தலமாகவும் இது போற்றப்படுகின்றது. கல்வி, ஞான விருத்திக்காக இத்தலம் சிறப்பாகக் கருதப்படுகிறது.

பங்குனித் திங்களில் ஐந்து நாள், சூரிய ஒளி நேரடியாக மூலவரின் மீது படுவது இத்தல சிறப்பாகும். சோழர் கல்வெட்டுகளும் இத்தலத்தின் தொன்மையை வலியுறுத்துகின்றன. சம்பந்தர், நாவுக்கரசர் ஆகியோர் பாடியுள்ளதால், இது மிகப்பெரும் புண்ணிய தலமாகக் கொண்டாடப்படுகிறது.

## திருத்தல வரலாறு

1500 ஆண்டுகளுக்கும் மேலான பழமையான கோயிலாகிய பொன்னூர் ஆபத்சகாயேசுவரர் கோயில், திருஅன்னியூரில் அமைந்துள்ளது. இக்கோயிலின் பிரதான இறைவனான சிவபெருமான் **"ஆபத்சகாயேசுவரர்"** என்ற பெருமைபெற்ற பெயரில் அழைக்கப்படுகிறான். அம்பாளாக, **"பெரியநாயகி"** எனும் அன்னையும் இக்கோயிலில் வழிபடப்படுகின்றாள். திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் ஆகிய நாயனர்களின் தேவாரப் பாடல்களில் இத்தலம் புகழ்பெற்றது. இதே ஊர் முற்காலத்தில் திருஅன்னியூர் என அழைக்கப்பட்டது.

கோயில் தல புராணங்களின்படி, நான்முகனிடம் வரம் பெற்ற அசுரன் தாரகன், தேவர்களை வருந்தச் செய்தான். அவனது தீமையை நீக்க, சிவபெருமானின் தவத்தை கலைக்க விரும்பிய தேவர்கள் மன்மதனை உதவிக்கு கூப்பிட்டனர். மன்மதன், தேவர்செயல்படி சிவனின் தவத்தை கலைத்த போது, கோபமடைந்த சிவனின் நெற்றிக்கண் நெருப்பில் அழிந்து போனான். இதனால் மன்மதனின் மனைவி ரதி ஆழ்ந்த வேதனையில், இத்தலத்தில் தவம் செய்து சிவ பெருமான் அருளைப் பெற்றார். சிவன் மன்மதனை மீண்டும் உயிர்ப்பித்து, இருவருக்கும் இத்தலத்தில் அருட்காட்சி தந்தார்.

இதன் மூலம் இக்கோயில், ஆபத்தில் துணையாக நிற்கும் **"ஆபத்சகாயேசுவரர்"** எனும் தனித்திறனை பெற்றது. பத்தர்களின் துன்பங்களை நீக்கி, துயரங்களிலிருந்து மீட்டெடுக்கும் பரமசிவத்தின் அருள் நிறைந்த இடமாக விளங்குகின்றது.

## திருக்கோயில் அமைப்பு

திருஅன்னியூரில் அமைந்துள்ள பொன்னூர் ஆபத்சகாயேசுவரர் திருக்கோயில், தமிழ்ச் சிவத்தலக் கோயில்களில் தனித்திறமை பெற்றது. இக்கோயில் **'கஜபிருஷ்ட விமானம்'** எனப்படும் யானை முதுகு வடிவத்தில் கட்டப்பட்ட விமானத்துடன் அமைந்த அற்புதக் கோயிலாகும்.

முன்வாசலாக உயர்ந்த இராசகோபுரம், பத்தர்களை வரவேற்கிறது. வாசலைக் கடந்து செல்லும்போது பலி பீடம், நந்தி போன்றவை வரிசையாக அமைய, மூலவர் சன்னதிக்கும், அம்மன் சன்னதிக்கும் தனித் தனியாக பலிபீடம்,



நந்தி உள்ளன. கோயிலின் வலப்புறத் திருச்சுற்றில் மாணிக்கவாசகர், சுந்தரர், அப்பர், சம்பந்தர் ஆகிய நாயன்மார்கள் உள்ளனர். மேலும் விநாயகர், முருகன், புனுகுமேனி நாதர் (புனுகீஸ்வரர்), பெரியநாயகி ஆகியோருக்கும் தனிச்சன்னதிகள் உள்ளன. அம்மன் சன்னதிக்கு அடுத்தே ஒன்பான் கோள் (நவக்கிரகம்) சன்னதி அமைந்துள்ளது.

இக்கோயிலில் இரட்டை தட்சிணாமூர்த்திகள் அருள் புரிவதும், கல்வி-ஞான வளர்ச்சிக்கு இத்தலம் சிறந்த இடமாகத் திகழ்வதற்கும் காரணம். முன்புறத்தில் தலக்குளம் அமைந்துள்ளது. இவ்வாறு திருக்கோயில் அமைப்பு, மரபு, வழிபாடு, மற்றும் ஆன்மிக வழிபாட்டுக் கூறுகளை ஒன்றாகக் கூர்ந்து நிறைவேற்றும் புனிதத் திருத்தலமாக விளங்குகிறது.

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**தகவல் - சைவசமயக் கலைக்களஞ்சியம் நூற்றொகுப்பு**

# வானியல் நட்சத்திர அறிவியல் அடிப்படையில் பிறந்தநாள் கொண்டாடும் தமிழ் மரபு

தமிழ் மரபில் நட்சத்திர அடிப்படையில் பிறந்த நாள் கொண்டாடுவதற்கான அறிவியல் பின்னணியை புரிந்து கொள்ள, வானியல், ஐந்திரம் எனும் பஞ்சாங்கம், சோதிடம் அல்லது நிமித்தம் மற்றும் தமிழ் பண்பாட்டு மரபு அல்லது பாரம்பரிய நடைமுறைகள் ஆகியவற்றைப் பற்றி ஆராய்வது தேவையாகின்றது. இந்த நட்சத்திரப் பிறந்த நாள் பண்டையத் தமிழ் சோதிட முறையான **“சாதகக் கணித”** அடிப்படையில் நட்சத்திரங்களின் பின்புல இயக்கத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளது. தமிழர்களின் வானியல் காலக் கணிதம் சூரிய-சந்திர-நட்சத்திர (உடு) மண்டல கணிய முறையில் (Lunar-Solar-Sidereal Prediction) கட்டமைக்கப் பட்ட மீமாண்புடைய கால நாள்காட்டி முறையாகும்.

**1. ஐந்திரம் எனும் பஞ்சாங்கம் என்பது என்ன?**

ஐந்திரம் எனும் பஞ்சாங்கம்: புறக்காலத்தை அளக்கும் வானியல் கருவியாகும்.

ஐந்திரப் பஞ்சாங்கம் என்பது பண்டைய தமிழர்கள் காலத்தை அளக்க அல்லது மானிக்க பயன்படுத்திய நுட்ப மான வானியல் கருவியாகும். இது புதுவ வானியல் அறிவிய லுக்கு நிகராக ஒப்பிடக்கூடிய துல்லியமான கால கணிய வானியல் கருவி. இந்தப் பஞ்சாங்கம் ஐந்து முக்கிய கூறுக ளைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது:

1) **வாரம் (சூரிய கால மண்டலம் / முறைமை) -**
**சூரியனின் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்ட கால அளவீடு.**

2) **திதி (சந்திர கால மண்டலம் / முறைமை ) -**
**சந்திரன் சார்ந்த நிலைமாறிலிகளின் அடிப்படையில் நாள்க-ாட்டி கணக்கீடுகள் செய்யப்படும்.**

3) **நட்சத்திரம் (நாள்மீன் அல்லது நட்சத்திரக் கூட்டமைப்பு மற்றும் ஓரை / இராசி மண்டலம் / முறைமை) -**
**நட்சத்திரங்களின் நிலையையும், அவை ஆட்சி செய்யும் ஓரை களையும் தீர்மானிக்கும் முறைமை.**

4) **ஓகம் / யோகம் (கிரக மற்றும் நட்சத்திர சுழற்சி மண்ட லம்/ முறைமை) -**
**சூரியன், சந்திரன், காணக்கூடிய ஏழு கிரகங்கள், நிழல் கிரகங்கள் (இராகு மற்றும் கேது - கிரகண வெப்ப ஆற்றல்கள்), மற்றும் 12 ஓரைகளின் விளைவுகளை கணிக்கும் முறைமை.**

5) **கரணம் (வெப்பம், ஈர்ப்பு ஆற்றல், பகல் மற்றும் இரவு சுழற்சி மண்டலம் / முறைமை) -**
**வெப்பம், பூமியின் ஈர்ப்பு ஆற்றல், ஒளி மற்றும் இருளின் தாக்கங்கள் உயிரியல் காலச்சுழற்சிகளில் ஏற்படும் தாக்கங்களை மதிப்பீடு செய்யும் ஒரு முறைமை.**

தமிழர்கள் வானியல் இயக்க நுட்பங்களை புறக்கால மாகக் கணக்கிட்டு அறிந்ததோடல்லாமல் சோதிடம் அல்லது நிமித்தமாக கணித்தும் வந்துள்ளனர் என்பதற்குச் சங்கப் புலவர் குமட்டூர்க் கண்ணனார் (பொ.ஊ.பி 2). பதிற்றுப் பத்தில் செய்த பதிவு மிகச் சிறப்புடையது.

**“நாள் கோள் திங்கள் ஞாயிறு கனை அழல்**
**ஐந்து ஒருங்கு புணர்ந்த விளக்கத்து அனையை**
**( பதி. 14 1 - 4 )**



அருட்குருநாதர்
முனைவர்
இராமகிருஷ்னன்
சிவகுமார்
(பினாங்கு அறிவியல்
பல்கலைக்கழகம்)

(இருபத்தேழு 27 ) நட்சத்திர கூட்டங் களும் (star Constellations), ☿அறிவன் ( புதன்), ♀ வெள்ளி, ♂ செவ்வாய், ♃ வியாழன், ♄ காரி (சனி) ஐந்து கோள் களும் திங்களும், ஞாயிறும், கரந்துறைக் கோள்கள் (Hidden Dwell Planets), கரந்துறைத் தனிமங்கள் (Hidden Dwell Elements) அதனுடன் கார்க்காய்-கருங்கோள் ( இராகு ) செங்கோள் (கேது) போன்ற இவற்றை ஒருங்கே உள்ளடக்கி, உறைந்து நிற்கும் கனையழலும் சேர்த்த வானியல் அறிவியலை, பஞ்சாங்க வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் ஐந்தும் ஒருங்கு புணர்ந்த சோதிட நிமித்த விளக்கத்து கரணி களாகக் குமட்டூர்க் கண்ணனார் தமது பதிற்றுப்பத்தில் பதிவு செய்துள்ளார்.

இந்த ஐந்திரப் பஞ்சாங்கத்தில் உள்ள ஆழமான கணிதப் பொது வடிவமைப்பு வானியல் காலத்தைக் காட்டுவதோடு மட்டுமல்லாமல், தமிழ் இனத்தின் பண்டைய வரலாற்றுப் பாரம்பரிய சோதிட நிமித்த வாழ்வியலையும், நுண் அண்ட, மா அண்ட வெளி அறிவியல்களையும் உள்ளடக்கியது ஆகும். இதன் நுட்பங்களை ஆய்வு செய்யும் யாரும் இதன் ஆழத்தையும் அறிவியல் மேன்மையையும் மறுக்க இயலாது.

**2. நட்சத்திரம் என்பதின் பொருள் என்ன?**

நட்சத்திரம் என்பது வானில் ஒளிரும் ஒரு நாள்மீனை அல்லது விண்மீன் குழுவை (constellation) குறிக்கிறது.

நட்சத்திரம் ( noctis -> nocturnal ) < நள் + அச்சு + திரம் என்பது

செறிவான பல அச்சு ( சித்திர / எந்திர ) வடிவில் திரட்சி பெற்றது அல்லது திரளும் ஆற்றலுடையது.

(ள் = ட் எழுத்து திரிபைக்காண்க : நள்+பு= நட்பு ,கள்+குடி = கட் குடி, திரள்+சி = திரட்சி, வாள் + போர் = வாட் போர்) பல அச்சு ( சித்திர / எந்திர ) வடிவில் வெளிப்பட்டு, விரும்பும் ஓர் அச்சு திரட்சியாகக் காண இயலுவது.

நள்<நள்ளு (செறிவு) < நாள் என்பது உயிர்களோடு கால வடிவாக நள்ளுவது, செறிவது அல்லது நட்பு உரிமை பாராட்டுவது. நள்ளிரவு -செறிந்த இரவு என்பது போல. எடுத்துக்காட்டாக :

**செறிவு: “நள் இருள் யாமத்து இல் எலி பார்க்கும் பிள்ளை வெருகிற்கு” (குறு. 107:3-4).**

**பொருள்:** நீ செறிந்த இருளை உடைய இடை யாமத் தில் வீட்டிலுள்ள எலிகளை உண்ணும் பொருட்டு ஆராயும் காட்டுப் பூனையின் குட்டிக்குச் சில நாள் இட்டு வைத் துண்ணும் உணவாகி

**3. நட்சத்திர வானியல் அறிவியல் கணிப்பு என்ன?**

நமது முன்னோர்கள் ஒரு நட்சத்திரத்தினூடே அல்லது நாள்மீனினூடே சந்திரன் பெயர்வதற்கு எடுத்துக்கொண்ட காலத்தையே **நாள்** என்றனர். சந்திரன் நின்ற இடமே நாள்

மீனாகும் என்பதனை பட்டினபாலையும், புறநானூறும் விளக்குகின்றன.

**நீல் நிற விசும்பின் வலன் ஏர்பு திரிதரும்**
**நாள்மீன் விராய கோள்மீன் போல ( பட் 68)**

பொருள்: நீல நிறமுடைய ஆகாயத்தில் வலமாக எழுந்து திரிதலைச்செய்யும் (அன்றைய) நாளுக்குரிய விண்மீனுடன் கலந்த கோள்களாகிய மீன்கள் போல,

**"மதிசேர் நாண்மீன் போல நவின்ற**
**சிறுபொ னன்கலஞ் சுற்ற விரீஇக்"**
**- (புறம்.160. குமணன்)**

ஆகவே சந்திரன் நின்ற நட்சத்திரமே **நாள்** என்று தமிழில் அழைக்கப்படுகின்றது. இதனைத் தொல்காப்பியத்தில் தொல்காப்பியர்

**"திங்களும் நாளும் முந்துகிளந் தன்ன"**
**- தொல்காப்பியம் 287**

திங்கட்பெயரையும் நாட்பெயரையும் இகரவீற்று ஐகாரவீற்று புணர்ச்சியாக விளக்குகையில் திங்கள்-நாள்மீன் கணக்கை நாட்காட்டியாகக் காட்டியிருப்பது, நமது முன்னோர்களின் மேதகு பல்நோக்கு வானியல் அறிவை காட்டுகிறது.

நட்சத்திரங்கள் (Nakshatras) என்பவை சந்திரனின் சுற்றுப் பாதையை 27 சம பாகங்களாகப் பிரிக்கும்

வானியல் பிரிவுகளாகும். ஒவ்வொரு நட்சத்திரமும் ஏறத்தாழ 13° 20' (360° ÷ 27) (அதாவது 13 பாகை மற்றும் 20 நிமிடங்கள்) அளவு கொண்டது.

தமிழர்கள் வகுத்த 27 நாள்மீன்கள் ( நட்சத்திரங்கள் )

| | நாள்மீன் | நாள்மீன்- தமிழ் ஒத்தச்சொற்கள் | வடிவமைப்பு விளக்கம் |
|---|---|---|---|
| 1. | அசுவினி - *Aswini* (β and γ *Arietis*) | இரலை , புரவி, குதிரைத் தலை, பரி, இவுளி, ஏறு, சென்னி, மா, துகரம், முந்நாள் | குதிரைத்தலை<br>அச்சுவம் (குதிரை) < அச்சு+ உவ < அசுவினி<br><br>"இந்த அச்சுவம் கூர்ச்சரம்" (திருவிளை. நரிபரி. 105);; |
| 2. | பரணி- *Parani* (35, 39, and 41 *Arietis*) | அடுப்புக்கொண்டை, தாழி, பூதம், தராசு, கங்குல், கிழவன், சோறு | அடுப்பு<br>பரண் +இ =அடுப்பகம் |
| 3. | கார்த்திகை- *Karthiga* (*Pleiades*) | ஆரல், அழல், அழகி, அளகு, இறால், அறுமீன், ஆவி | சுவாலை<br>கார் + தீ + இகை <கார்த்திகை |
| 4. | இரோகிணி- *Rogini* (*Aldebaran*) | சகடு, அயநாள், வையம், பண்டி, தேர், உருளை, பாரு | சகடம்<br>சிவப்பானது<br>தகடு → சகடு < சக்கரம் |
| 5. | மிருகசீரிடம் – *Mirugaseeridam* (λ, φ *Orionis*) | மன்றலை, ஐந்தானம், மார்கழி,, மதி, கேராளன், நரிப்புரம், மும்மீன், தேங்காய் | மான்தலை<br>மிருக+ சிரசு < மிருகசிரசு = மான் +சிரசு |
| 6. | திருவாதிரை – *Thiruvaathirai* (*Betelgeuse*) | மூதிரை, இறை, செங்கை, யாழ், வில், மார்கழி | தீகங்கு<br>திரு + ஆது (இடை)+இரை = திரு ஒரையர் இடை சொலிப்பு |
| 7. | புனர்பூசம் *Punarpoosam* (*Castor and Pollux*) | கழை, புணர்பூசம், பிண்டி, கார், திரன், மூங்கில், மாலை, கரும்பு, ஆவணம், விண்டம், புனர்தம், பாலை | ஓடம்<br>குழு → கழு → கழை புனர்பூசத்துக் கடையின் வெள்ளி எல்லையாக (புறம். 229,உரை) |
| 8. | பூசம்- *Poosam* (γ, δ and θ *Cancri*) | காற்குளம், கொடிறு, பூத்தடம், வாவி, குடம் , தரா, தைலம், குருநாள் | புடலம்பூ<br>பூச உருவின் பொலந் தெளிந்தனையவும் (சிலப். 14:188).<br><br>பூசு : நீரால் அலம்புதல்; 'நீரான்வாய் பூசுப' (நான். 35);; |
| 9. | ஆயிலியம் - *Ayilyam* (δ, ε, η, ρ, and σ *Hydrae*) | கட்செவி, அரவம், கவ்வை , பாம்பு, பணி | சக்கரம்<br>கவ்வை நாண் மீன் "நிறைகொள் கவ்வைபணி யாயில்" (உள். உடை. 16); (த.சொ.அக.);;<br>ஆய் → ஆயில் : "மாசிலாயிலி யத்திற் காமமுண்டாம்" (கூர்மபு.19-வது சிராத்தமு. 5);; |

| | | | |
|---|---|---|---|
| *10.* | மகம் – *Magam (Regulus)* | கொடுநுகம் , முயற்கனி, வாய்க்கால், வேட்டுவன் , ஏழிலி, ஏமலி, மாசி | நுகத்தடி<br>மகம் -ஈகம்<br>கலப்பை:<br>கொடுநுக நுழைந்த கணைக்காலத்திர" (அகம். 350);; |
| *11.* | பூரம் - *Pooram* (δ *and* θ *Leonis)* | கணை , நாவிதன், எலி, இடைச்சனி ,துர்க்கை | கட்டில்கால்<br>பூர் → பூரம் , கால் |
| *12.* | உத்திரம்- *Uthiram (Denebola)* | உத்தரம் , பாற்குனி , பங்குனி, கடைச்சனி , பாற்குளம் | கட்டில்கால்<br>உள்+திரம்<br>உயர்ந்த தூண் |
| *13.* | அத்தம் *Astha* (α, β, γ, δ *and* ε *Corvi)* | ஐவிரல், கை , அங்கை , ஐம்மீன், உத்தமன், களிறு, நவ்வீ, கௌத்துவும் | கைத்தளம் |
| *14.* | சித்திரை – *Sithirai (Spica)* | அறுவை, ஆடை, ஆம்பல், பயறு, நெய், மீன் , செல்வி | முத்து |
| *15.* | சுவாதி- *Suvaathi (Arcturus)* | விளக்கு, சோதி, தீபம், மரக்கால், பதுமம் | பவளம் |
| *16.* | விசாகம்- *Vishagam* (α, β, γ *and* ι *Librae)* | முறம், சுளவு, வைகாசி, முற்றில் | தோரண வாயில்<br>விசு + ஆகம் |
| *17.* | அனுடம்- *Anusham* (β, δ *and* π *Scorpionis)* | முடப்பனை, புல், தாள், தேன், பெண்ணை, பனை | குடை |
| *18.* | கேட்டை-*Kethai* (α, σ, *and* τ *Scorpionis)* | துளங்கொளி வாளி, வல்லாரை, ஒளி, நாழி, | ஈட்டி |
| *19.* | மூலம் – *Moolam* (ε, ζ, η, θ, ι, κ, λ, μ *and* ν *Scorpionis)* | குருகு, கொக்கு, தேட்கடை, ஆனி | பாயும் சிங்கம் |
| *20.* | புராடம் – *Pooradam* (δ *and* ε *Sagittarii)* | உடைகுளம், முற்குளம், பொய்கை, வாவி, உடை | இரட்டைச்சக்கரம் |
| *21.* | உத்திராடம் - *Uthiraadam* (ζ *and* σ *Sagittarii)* | கடைக்குளம், ஊர்தி, மணி, தானம், முடி | கட்டில் கால் |
| *22.* | திருவோணம் *Thiruvoonam* (α, β *and* γ *Aquilae)* | முக்கோல், ஓணம் , கோணை, சிரவணம், உலக்கை | மூன்றறை அடி<br>ஓ → ஓண் → ஓணம் = நீண்டுயர்ந்த கொடிபோன்ற விண்மீன் கூட்டம் |
| *23.* | அவிட்டம்- *Avitham,* (α *to* δ *Delphinus)* | காக்கை, புள், பறவை, ஆவணி | மத்தளம் |
| *25.* | சதயம்- *Sathayam* (γ *Aquarii)* | செக்கு, சுண்டன், குன்று, செக்கி | வட்டம் |
| *25.* | பூரட்டாதி – *Poorathaathi* (α *and* β *Pegasi)* | நாழி , கொழுங்கோல், புரட்டை, ஞாளி | கட்டில் கால் |
| *25.* | சதயம்- *Sathayam* (γ *Aquarii)* | செக்கு, சுண்டன், குன்று, செக்கி | வட்டம் |
| *25.* | பூரட்டாதி – *Poorathaathi* (α *and* β *Pegasi)* | நாழி , கொழுங்கோல், புரட்டை, ஞாளி | கட்டில் கால் |
| *26.* | உத்திரட்டாதி – *Uthiratdaathi* (γ *Pegasi and* α *Andromedae)* | முரசு , வேந்தன், அறிவன் | கட்டில் கால் |
| *27* | இரேவதி – *Revathi* (ζ *Piscium)* | தோணி, நாவாய், நாவிதன், கடைமீன், மரக்கலம், சூலம் | இரட்டை மீன் |

*(இரா.சிவகுமார்.2023a)*

சந்திரன் ஒரு நட்சத்திரத்தைக் கடக்க சுமார் ஒரு **நாள்** (24 மணி நேரம்) எடுத்துக்கொள்கிறது. எனவே, சந்திரன் 27 நட்சத்திரங்களையும் கடந்து செல்ல ஏறத்தாழ 29.5 நாட்கள் ஆகுவதை ஒரு **மாதம்** அல்லது **திங்கள்** என்று தமிழர்கள் அழைத்தனர். இதனைப் பெருங்குன்றூர் கிழார், பதிற்றுப்பத்தில்

**'நின் நாள் திங்கள் அனைய ஆக திங்கள்' (பதி. 90: 51 - 54)**

என்பார். சந்திரன் நட்சத்திரங்களைக் கடந்து நாட்களை உருவாக்கி ஒரு மாதமாகப் ( திங்களாகப் ) பெயருவதை பெருங்குன்றூர் கிழார் அழகாகப் பதிவு செய்துள்ளார்.

**சூரியன் ஓர் ஓரையில் அல்லது இராசியில் பெயர்ந்தை**




படம் 1: அனுடம் (Anusham), கேட்டை (Kethai), மூலம் (Moolam) நட்சத்திரக் கூட்டங்கள் ஒரு விருச்சிக / நளி (Scorpio) ஓரையாகும் (Zodiac. (இரா.சிவகுமார்.2023a)

**உறுதிச்செய்து பின்பு, சந்திரன் அவ்வோரையின்** 180° பாகைக்கு எதிரே உள்ள ஓர் ஓரையின் **குறிப்பிட்ட நட்சத்திரத்தில் முழுநிலவாக ஒருசேர சந்திர மாதங்கள் கணிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக :**

**சூரியன் மேழ ஓரையில் நுழைவு பெற்று, சந்திரன் மேழ ஓரையின் 180°** பாகைக்கு எதிரே உள்ள **துலா சித்திரை** நாள்மீனில் முழுநிலவாகச் சேர அது சித்திரை மாதமாகத் திகழும். இந்த வானியல் குறிப்பை இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரத்தில் (பொ.ஊ.பி 2-ஆம் நூற்றாண்டு) பதிவு செய்துள்ளார்.

**"சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென" - (சிலப். இந்திர விழவூரெடுத்த காதை, 64)**

அது போல விசாக நாள்மீனில் முழுநிலவு திகழ்கிற மாதம் **வைசாகி அல்லது வைகாசி** ஆகும். முழுநிலவு அனுடம் நின்ற மாதம் **ஆனி,** பூராடம் அமைகிற மாதம் **ஆடி,** திருவோணம் நின்ற மாதம் **ஆவணி,** பூரட்டாதி அமைகிற மாதம் புரட்டாசி, அசுவதி நின்ற மாதம் **ஐப்பசி** ( அற்பசி,அற்பிகையாகும்), கார்த்திகை நாள்மீனில் அமைகிற முழுநிலா **கார்த்திகை,** மான் தலை (மகயிரம் - யாப்பருங்கலவிருத்தி ) நின்ற மாதம் **மார்கழி,**

**மழை நீங்கிய மாவிசும்பில் மதிசேர்ந்த மகவெண்மீன் (பட். 34-35)**

பூச நாள்மீனில் முழுநிலா அமைகிற மாதம் தை(தைசம், தைய்யியம் , மக நாள்மீனில் முழுநிலா அமைகிற மாதம் மாசி (மாகி).

**"மாசி நின்ற மாகூர் திங்கள் " (பதி. 58, ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்)**

இது போன்றே, இரண்டு ஓரைகளுக்கு இடையிலான ஓர் உத்தர நாள்மீனின் நுனியைப் பங்கிட்ட திங்களைப் **பங்குனி** = பங்கு + நுனி என்றனர்.

**4. ஓரை அல்லது இராசி மண்டலம் என்பதின் பொருள் என்ன?**

ஓரை என்பது ஒரு குறிப்பிட்ட நட்சத்திரக் கூட்டங்களின் (விண்மீன்/உடு கூட்டங்களின்) ஒரு குறியீடாகும்.

சோதிடக்கலையில் இந்த நட்சத்திரக் கூட்டத்தை அல்லது ஓரை தொகுதியை **இராசி=இரா** (இரவு) + **சி>சீ (சீவிக்கும் புனித் திருமகள்/இலக்குமி )** என்றும் ஆங்கிலத்தில் Zodiac ( சோதியம்= சோதி + இயம்: சுல் + தீ + இயம் > சொல் + தீ + இயம் >சொலி + தீ + இயம் > சோதி + இயம் > சொலிக்கும் தீ புனைவச்சு அல்லது சொலிக்கும் சித்திரங்கள்) என்றும் அழைப்பது வழக்கு.

ஓரை = ஒல்- ஓர்-ஓர் +ஐ = அழகிய நட்சத்திரங்களின் கூட்டம்(இராசி- Zodiac), அல்லது மகளிர் கூட்டம் என்று பொருள்படும்.

**ஓரைக்கு : விளையாடுங் கலமும், இராசியும், ஓரிடைச்**

சொல்லும், குரவையும்- ஓரை ( நிகண். பிங்கலம் 10 :225) , என்று பிங்கல நிகண்டும், சேந்தன் திவாகரமும் (207) பல்பொருள் விளக்கம் செய்கின்றன.

உதாரணத்திற்கு : அனுடம்- (Anusham-β, δ and π Scorpionis), கேட்டை (Kethai-α, σ, and τ Scorpionis), மூலம் (Moolam- ε, ζ, η, θ, ι, κ, λ, μ and ν Scorpionis) நட்சத்திரக் கூட்டங்கள் விருச்சிகம்/நளி (Scorpio) எனும் ஓர் ஓரையாகும் ( Zodiac ).

தமிழர்கள் சந்திர மண்டலம் உருவாகுவதற்குக் காரணமான 27 நட்சத்திரங்களை (நாள்மீன்களை), சூரிய வெளித்தோற்ற கடவுப் மண்டலத்திற்கு உள்ளடக்கும் போது பன்னிரு (12) ஓரைகளாக அல்லது இராசிகளாக வகுத்தனர்.

சூரியன் தனது வட்டச் சுழற்பாதையில் ஓரையை அல்லது இராசியை வெளித்தோற்றத்தில் எதிர்ப்பட்டு, நின்று கடப்பதை ( Sun's apparent motion against stars constellationa), பன்னிரு (12) ஓரை இல்லங்களாக உவமை செய்தனர். அறிவியலுக்குப் பெயர்த்து காட்டுவார்.

அப்படியானால் ஒவ்வொரு இராசியிலும் இரண்டே கால் நட்சத்திரங்கள் மட்டுமே உள்ளடக்கம் பெற இயலும் ( 30° ÷ 13°20′ = 2.25 நட்சத்திரங்கள்). எனவே, ஒரு நட்சத்திரம் நான்கு (4) பாதங்களாக்கப்பட்டு 27 நட்சத்திரங்களுக்கு 108 பாதங்கள் (27 x 4 = 108) உருவாக்கப்பட்டன.

எடுத்துக்காட்டாக : சூரியன் மேழ இராசியில் (0° – 30°) வெளித்தோற்ற நகர்ச்சி அல்லது கடவு (Sun's apparent motion) செய்யும் பொழுது, அசுவினி/புரவி (0° – 13°20'), பரணி/அடுப்புக்கொண்டை (13°20' – 26°40') என்ற இரண்டு நட்சத்திரங்களை முழுமையாகவும், மூன்றாவது கார்த்திகை/ஆரல் (26°40' – 30°) நட்சத்திரத்தில் கால்(1/4 =0.25) பங்கு அல்லது ஒரு பாதமாகவும் கடக்கும். தமிழர் ஓரை அறிவியல் மிக நுட்பமான வனியல் சூரிய-சந்திர-நட்சத்திர (உடு) கணிய முறையில் (Lunar-Solar-Sidereal Prediction) கட்டமைக்கப்பட்டுள்ளதை நாம் காணலாம்.




படம் 2: சூரியன் சிம்மம் / மடங்கல் (Leo) ஓரையில் எதிர்ப்படும் வெளித்தோற்ற நகர்ச்சி ( Sun's apparent motion against zodiac ).Thanks: (Star Constellations: The Zodiac› 2017)

சூரியன் தனது வெளித்தோற்ற நகர்ச்சியில் (Sun's apparent motion), நாள்மீன் அல்லது நட்சத்திரக் கூட்ட கடவு ஓரை இல்லங்களைக் கடக்கும் பாதையை மேழம், இடபம், ஆடவை, கடகம், மடங்கல், கன்னி, துலை, நளி, சிலை, சுறவம், கும்பம், மீனம் என்று பன்னிரு (12) வடிவுகளில் இராசியாக அடையாளம் கண்டு அவற்றிற்குப் பொருத்தமான உவமை அல்லது குறியீட்டு வடிவங்களை உருவாக்கினர்.

ஆகவே ஒவ்வொரு சூரிய முந்நூற்றறுபது (360°) பாகை வட்டச் சுழற்பாதையில் ஒவ்வொரு இராசியும் முப்பது (360° / 12 ஸ்ரீ 30° ) பாகை பரப்பளவைக் கொண்டிருப்பதாக அமைந்திருக்கும் கணிதத்தை திருமூலர் தமது திருமந்திரத்தில்

**வந்திடும் அக்கரம் முப்ப திராசியும்**
**வந்திடும் நாளது முந்நூற் றறுபதும்**
**வந்திடும் ஆண்டும் வகுத்துறை அவ்விலே. (திருமந். 10.4.9.14)**

வானியல் ஆண்டு வகுத்துறை கணிதத்தை சோதிட கணிய தமிழர் ஓரை அறிவியல் தற்கால சூரிய மானத்தை (Solar prediction) மட்டுமே வைத்து கணக்கிடப்படும் ஆங்கிலேய கிரிகோரியன் கால நாள்காட்டியை ( Gregorian Calender) விட பயன்பாட்டில் அறிவியல் சிறப்பும், துல்லியமும், வரலாற்று மாண்பும் உடையது. ஆங்கிலேய கிரிகோரியன் கால நாள்காட்டி ( Gregorian Calender ) சந்திர மான கணியம்(Lunar prediction), வியாழமான ஆண்டு (விரிகற்பதி › பிரிகசுவதி ) கணியம் (Jupiter or Jovian year prediction), நட்சத்திர (உடு) பெயரா ஆண்டு கணியம் ( Sidereal Year prediction) செய்ய உதவாது.

**5. சோதிடத்தில் நட்சத்திர பிறந்த நாள் கணிப்பு எவ்வாறு கணிக்கப்படுகின்றது ?**

பிறந்த நாள் (பிறப்பு நட்சத்திரம்): ஒருவர் பிறக்கும் போது அவ்வாண்டு மாதத்தைக் கணக்கில் நிறுத்தி, சந்திரன் அம்மாதத்தில் எந்த நட்சத்திரத்தில் ஒருங்கே நின்றதோ,




*படம் 3: பன்னிரு ஓரைகள் அல்லது இராசி மண்டலங்கள்* (12 Zodiacs Constellations) *(இரா.சிவகுமார்.2023a).*

அந்நட்சத்திரம் அவரது பிறப்பு நட்சத்திரமாகக் கணிக்கப் படுகின்றது.

பிறப்பு நட்சத்திர நாள் என்பது, ஓர் ஆண்டில் ஒருவர் பிறந்த குறிப்பிட்ட மாதத்தில் சந்திரன் மீண்டும் அதே நட்சத் திரத்திற்கு திரும்பி வரும் நாளாகும். இது ஆங்கிலேய சூரிய கிரிகோரியன் கால நாள்காட்டியை (Gregorian Calender) வைத்துக் கணிக்க இயலாது.

**6. நட்சத்திர பிறந்த நாள் கணிப்பின் சிறப்புகளை எவ்வாறு தமிழர் மரபு காண்கின்றது ?**

அண்டத்தில் ஒளி சொலிக்கும் இடமாகத் (சோதிட மாகத்) தோன்றும் இந்தப் பெரும் இயற்கையின் தனி மங்களை( Natural Elements) உள்ளீடுகளாக (inputs) அமைத்து புறக்காலத்தைத் ( Physical Time ) துல்லிய மாக கணிக்க மிக நுட்பமான சூரிய-சந்திர-நட்சத்திர (உடு) மண்டல (Lunar-Solar-Sidereal Prediction) ஐத்திர அல்லது பஞ்சாங்க கணித மாதிரியத்தை ( Mathematical Model) உருவாக்கினர் தமிழர்கள். இந்தப் புறக்காலம் ( Physical Time ) உயிர்களுக்கு ஒழுக்கம் நிறுத்தும் ஆற்றலுடையது மட்டுமல்லாது அதன் உருவாக்கத்திற்கு ஓரை மற்றும் நாள் (நாள்மீன்/நட்சத்திரம்/) என்ற வானியல் கட்டமைப்புகள் அடித்தளமாவதைத் தொல்காப்பியம் எடுத்துக்காட்டும்போது. **மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும் துறந்த ஒழுக்கம் கிழவோற்கு இல்லை. – (தொல். பொருள். கள 135)** என்பார்.

ஓரையும் நாளும் உயிர்களுக்கு ஒழுக்கம் நிறுத்த வல்லது. காலத்தின் வல்லமையை, ஓர் ஒழுக்கமாகக் கண்ட பெருமை நமது பண்பாட்டின் அல்லது மரபின் மெய்யுலகு ( Realism) ஆற்றலைக் காட்டுகிறது. காலம் கெடுமானால், ஒழுக்கம் கெடுமென்றும், ஒழுக்கம் கெடுமானால் காலம் கெடுமென்றும், ஒழுங்கின் வழி காலம் ஆளப்பட, அது நமது ஆளுமைக்கு வரும் என்ற மிக நுட்பமான கருத்தை வலியுறுத்தி நிற் கின்றார் தொல்காப்பியர். மேலும் பிறந்தநாள் விழாவை தமி ழர்கள், ஒருவர் பிறந்த நட்சத்திரத்தில்(நாள்மீனில்) அதாவது பிறந்தவரின் சிறந்த நாளினிற் வெறுப்பு, தணியாக் கோபம். (பிங்.),செற்ற நீக்கிய மனத்தினராய் (திருமுரு. 132), தானஞ் செய்தலும் வேண்டியன கொடுத்தலும் பிறவுமாம் மங்கல தூய வண்ணமாகிய வெள்ளணியும் அணிந்து (அன்று வெள்ளாடை அணிந்து) எவ்வுயிர்க்கண்ணும் அருளே நிகழ்த்த வேண்டும் என்பார் தொல்காப்பியர்.




*படம் 4: சூரிய-சந்திர-நட்சத்திர (உடு) கணிய முறையில்* (Lunar-Solar-Sidereal Prediction) *கட்டமைக்கப்பட்ட தமிழர் ஓரை அறிவியல்* ( Tamilar Zodiac Science ) *(இரா.சிவகுமார்.2023*b*).*

**சிறந்த நாளினிற் செற்றம் நீக்கிப்**
**பிறந்த நாள் வயின் பெருமங் கலமும் - ( தொல் - பொருள். 88: 7-8 )**

சோதிடத்தில் இந்தப் பிறப்பு நட்சத்திரத்தை, பிறந்தவரின் இலக்கனத்தோடு இணைத்துச் அவரது சாதக ஆளுமை, ஊழ்/விதி மற்றும் வாழ்க்கை நிகழ்வுகளுடன் தொடர்பு படுத்தப்படுகிறது.விரிவு இங்கில்லை.

ஓரையும் நாளும் உயிர்களிடையே மறைந்து கிடக்கும் ஒழுக்கத்தை வெளிக்கொணரும் ஆற்றலுடையன என்ற புறக் கால நுட்பத்தையும் காட்டி, மறைந்த ஒழுக்கத்து ஆற்றல் ஓரையும் நாளையும் அகக்காலமாகப் புணரும் ஆற்றலையும் உயிர்களுக்குத் தரும் என்று கால ஒழுக்க முறைமையை வடி வமைக்கின்றார் தொல்காப்பியர்.

**நட்சத்திரப் பிறந்தநாள் தொடரும்.....**




தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org




# The Importance of Cultural Transmission

Within the great Tamil and Saiva texts of the Thirukural and Thirumurais and the various festivals of Sivaniravu (Night for Siva) and Pongal lies something more than tradition. There lies identity. Tamil culture, which happens to be the world's oldest living civilisation, is not merely a repertoire of practices and a language. It is a way of life, an ethical code, and an art treasure house that has shaped generations. But the passing on of this heritage doesn't happen by itself. It must be passed on actively and consciously from grandparents to parents, parents to children, and so on.

Tamil culture has survived invasion, colonisation, displacement, and diaspora. Its resilience is a miracle, but not a guarantee. Unless knowingly transmitted, the wealth and wisdom of Tamil culture can be reduced to empty symbols, festival trimmings without meaning, scripts unread, and songs uncomprehended.

Values like virunthombal (hospitality) are aṟam (righteousness) are not just learned from textbooks. They lived. They are absorbed when a child sees their grandfather reciting Thevaaram before sunrise, or their grandmother laying out kolams. They are affirmed when parents take their children to Tamil language classes not out of obligation but as a happy act of identity-making.

Tamil culture is not just language or ritual. It is a way of thinking, feeling, and living. For Tamil youth growing up in multicultural societies, especially in the diaspora, cultural transmission anchors them. It tells them who they are, where they come from, and what values they stand for. In a world where identity crises are growing, culture is a compass.

When children grow up without any deep connection to their Tamil heritage, they may inherit only fragments, just a surname, a temple visit, or a few Tamil words. But without understanding the roots behind those fragments, identity becomes performative, not lived. This is why, as individuals, we should be very strong in preserving and passing on culture to younger generations, comprehensively, through not just words but also actions.

This passing on must be intentional. Speak Tamil at home. Celebrate Sivaniravu (Night for Siva) not just with food, but with the philosophy of why it matters. Support Tamil language schools, encourage children to perform in Tamil dramas, learn traditional instruments, and take part in community festivals not just as entertainment but as education. Let culture be lived, not performed for one day. Only then can our ancient and beautiful culture continue to survive millennia to come.

# Saiva Saint Enadinathar Nayanar – The Exemplary



The 'Paththi' movement was sociologically revolutionary in Tamil Nadu, helping erode evils of the society with casteist distinctions in the limelight. Though the practice of assigning caste is still afoot in identifying individuals from the average Indian citizen to immortal Saivite Saints, much of the defamative connotation was rid with the examples made of the individuals from the so called lower stratas of this system. Though this approach was fundamentally negatory than remedial, it did achieve a degree of social reconciliation. Periya puranam chips into this narrative with much emphasis on this particular nayanar amongst similar more.

Enadinathar's story, the 8th in order, is as lifelike an experience as it could get in a puranic epic.

## Background

Born a member of the Eezha community near Kumbakonam, Enadinathar held hereditary fame for this martial prowess. Eezhas, who are traditionally associated with toddy-tapping, are also intrinsically known for their acts of battle heroism. Hundreds of soldiers underwent training at the Nayanar's school, which was a huge eyesore for a jealous distant relative with his own sub par martial school, Atisooran. Once he challenged the Nayanar to a contest, plotting to spill blood for no good purpose, weakening Enadinathar's institution.

Enadinathar accepted the challenge and roundly defeated Atisooran with a lot of bloodshed on the weaker side. Unresolved, Atisooran requested a duel which was also taken on by the saint, but Sooran had learnt

the wrong lesson from the first encounter and had plotted to trick Enadinathar into a week corner by betting on the saints uncompromising belief systems, a supreme quality and a moral compass of the entire Eezha community.

## The Test

On the day of, Sooran tactically adorned his forehead full of Siva relics - fabricating a “Devout facade”, only to be used as the ultimate trick, which was to keep his face concealed, aided by the hand held shield for the entire duel and when the moment came, to drop it to let the ‘Plump Saivite Devotional’ visage inflict paralysis on the Saint, which was to give Sooran the perfect kill window. And it did very well! As the shield was lifted, Enadinathar froze, not in confusion or lack of initiative, but in absolute understanding of what his boundaries were, which dictated that he shall not inflict any discomfort to any bearer of the sacred Saivite relics.

This militant discipline gave Atisooran this anticipated window and he struck at the Saint’s abdomen with this weapon, taking the saint’s life.

## Teachings retained

This story lacks the routine Divine intervention or roleplay that is so normalised throughout the Periyapuranam. To answer as to why, any mortal would have to argue that they lack that ability to explain divine discretion, which the very divine beings themselves struggle with quite famously. However, it can be ascertained that this very mundane experience was given the status of an immortal epic purely because of the exemplary qualities of the person, rather than the presence of Divine dialogue or a great sacrifice or a great miracle. This is truly rare across the



entire Saivite doctrine, to be featured as a mainstream story without an absolute act of divine intervention or a pulpable miracle.

This elevation of character, personhood and community through the very effect of being featured in the saintly 63 proves both the value system of the Periyapuranam and the socio - revolutionary aspect of the Saivite scriptures.

Lessons from his life are remembered by the elders, us and the future generations on the Avani Ayilya Nachathiram, on his Kuru Poosai day.

Still headed strong into some more bodily suffering before a calmer and peaceful set of Nayanmars, this series will explore further into the lessons taught through the Periya puranam through much drama, fragrant atmospheres and grand gestures.

# Aani Utharam Festival & Naalvar Consecration at Sri Karphaga Vinayakar





Siva
P.Abiram
SG

Located in the suburb of Homebush, the Sri Karphaga Vinayakar Temple is one of Sydney's most prominent Saiva temples and a cornerstone of the Tamil community. Established in 2003, the temple is dedicated to Vinayakar (Pillaiyar). Over the years, the temple has grown not only in its physical structure but also in its role as a hub for religious, cultural, and educational activities. The temple features vibrant gopurams and intricately carved stone sculptures and draws thousands of devotees from across Sydney every year.

The temple recently held a Naalvar Consecration (Thirukuda Nanneerattu) on 2nd July 2025, coinciding with Aani Uthiram Fes tival. Four new statues of the revered Saiva saints, Sampanthar, Appar, Sundarar, and Manickava sakar were consecrated and unveiled in the celebra tion. These saints, collectively known as Naalvar, are central figures in Tamil Saivism, who are known for their devotional hymns and unwavering faith toward Lord Sivan. Furthermore, the Thennadu Tamil Agamic Saiva Mutt graciously handed over a set of the Twelve Thirumurais to the temple, to be respectfully placed alongside the shrine of Adalvallan.. These sacred texts, which preserve the hymns and philosophical teachings of the Naalvar and other Saivite saints, now form a valuable part of the temple's spiritual library and serve as a resource for future generations.

This event marks a spiritual enrichment for the temple, reinforcing its role in connecting diaspora Tamils to their Saiva traditions and deepening the devotional experience for worshippers.







# தென்னாட்டு நிகழ்வுகள்



அருளம்பலம் சுவாமிகள் குருபூசை (03-07-2025)



மாணிக்கவாசகர் குருபூசை (29-06-2025)



திருஞானசம்பந்தர் குருபூசை (12-06-2025)



மண்டைதீவில் செந்தமிழில் புதுமனைப் புகுவிழா வழிபாடுகள் (02-07-2025)



தென்னாடு இதழ் வழங்கல் (02-07-2025)









ஆனிஉத்தர நடராசர் திருமஞ்சன வழிபாடுகள் (01-07-2025)

# தென்னாட்டு நிகழ்வுகள்



வைகாசித் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (10-06 -2025)

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் ஐம்பத்து ஒன்பதாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் “மதி நிறங்கள்” (மதி கலர்ஸ்) பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 ஆடவை நல்லோரை ஆனித் திங்கள் 26ம் நாள் நிறைமதி அன்று (10-07-2025 வியாழக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org
fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org